بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 8

இதழ் 18

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - ஷவ்வால் 13 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - ஹிஜ்ரத் 04 ★ 04 மே 2023


## அல்லாஹ்வின் கட்டளை

قَوۡلٌ مَّعۡرُوۡفٌ وَّمَغۡفِرَۃٌ خَیۡرٌ مِّنۡ صَدَقَۃٍ یَّتۡبَعُہَاۤ اَذًی ؕ وَاللّٰہُ غَنِیٌّ حَلِیۡمٌ ﴿۲۶۴﴾

பொருள் :

துன்பம் பின் தொடரும் தருமத்தை விட இன்சொல்லும் மன்னித்தலும் சிறந்தவையாகும். மேலும், அல்லாஹ் தேவைகளற்றவனும் சகித்துக் கொள்பவனுமாவான்.

(அல்பக்கரா : 264)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இஸ்லாத்தில் இரண்டு பெருநாள்கள் உள்ளன. இந்த இரண்டு நாட்களும் மிகவும் மகிழ்ச்சிக்குரிய நாளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவற்றில் வியக்கத்தக்க பல அருட்களும் வைக்கப்பட்டுள்ளன

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

எல்லா சகோதரர்களும் நினைவிற் கொள்ளுங்கள். அல்லாஹ் இஸ்லாத்தில் எப்படிப்பட்ட நாளை நிர்ணயித்துள்ளான் என்றால் அந்த நாள் மிகவும் மகிழ்ச்சிக்குரிய நாளாக கருதப்படுகின்றது. மேலும், அவற்றில் வியக்கத்தக்க அருட்களை வைத்துள்ளான். ஒட்டுமொத்தமாக அந்த நாட்களில் ஒரு நாள் ஜுமுஆ நாள் ஆகும். இந்த நாளும் மிகவும் அருளுக்குரிய நாளாகும். அல்லாஹ் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களை ஜுமுஆ நாளன்றே படைத்தான். மேலும், அந்த நாளன்றே அன்னாரின் தவ்பா ஒப்புக் கொள்ளப்பட்டது. இன்னும் ஏராளமான அருட்களும், சிறப்புகளும் அந்த நாளின் தாக்கத்திற்குரியதாக உள்ளன. அதேபோன்றே இஸ்லாத்தில் இரண்டு பெருநாள்கள் உள்ளன. அந்த இரண்டு நாட்களும் மிகவும் மகிழ்ச்சிக்குரிய நாளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அவற்றில் வியக்கத்தக்க பல அருட்களும் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் நினைவிற் கொள்ளுங்கள். இந்த நாட்கள் தத்தமது இடத்தில் நிச்சயமாக அருளுக்குரிய நாட்கள் மற்றும் மகிழ்ச்சிக்குரிய நாட்கள் ஆகும். ஆனால், இந்த அனைத்து நாட்களையும் விட அருளுக்குரிய மற்றும் மகிழ்ச்சிக்குரிய நாள் (ஒன்று) உள்ளது. ஆனால், மிகவும் வேதனையுடன் காணக் கிடைப்பது என்னவென்றால், மக்கள் அந்த நாளை எதிர்பார்ப்பதும் கிடையாது. அதனை தேடுவதும் கிடையாது. அந்த நாளின் அருட்கள் மற்றும் சிறப்புகளைக் குறித்து மக்களுக்கு தகவல் இருந்து அதற்கு அவர்கள் மதிப்பளித்திருந்தால் உண்மையில் அந்த நாள் அவர்களுக்கு மிகவும் அருளுக்குரியதாகவும், நற்பேறுக்குரிய நாளாகவும் நிரூபணம் ஆகியிருக்கும். மேலும் மக்கள் அதனை பெரும் செல்வமாக கருதியிருப்பார்கள்.

ஜுமுஆ மற்றும் பெருநாட்களையும் விடவும் சிறந்த மற்றும் அருளுக்குரிய அந்த நாள் எது? நான் உங்களுக்கு கூறுகின்றேன். அந்த நாள் மனிதன் தவ்பா செய்கின்ற நாளாகும். அந்த நாள் மற்ற அனைத்து நாட்களையும் விட சிறந்த நாள் ஆகும். மேலும் எல்லா பெருநாளையும் விட சிறந்த நாளாகும். ஏன்? ஏனெனில், மனிதனை நரகத்திற்கு அருகில் கொண்டு சென்று கொண்டிருந்த மற்றும் உள்ளுக்குள்ளேயே இறைக் கோபத்திற்கு அவனை ஆளாக்கிக் கொண்டிருந்த தீய செயல்களின் நிலைகளிலிருந்து அந்த நாளன்று அவர் கழுவப்படுகின்றார். மேலும், அவரது பாவங்கள் அவருக்கு (அந்த நாளன்று) மன்னிக்கப்படுகின்றன. நிரந்தரமான நரகம் மற்றும் நிரந்தரமான இறைக் கோபத்திலிருந்து மனிதனுக்கு இரட்சிப்பு வழங்கக்கூடிய நாளை விட மனிதனுக்கு மகிழ்ச்சிக்குரிய நாளாகவும், பெருநாளாகவும் வேறு எந்த நாள் இருக்கும்? முதலில் அல்லாஹ்விடமிருந்து விலகி இருந்த மற்றும் அவனது கோபத்திற்கு இலக்காகியிருந்த பாவம் செய்தவர் தவ்பா செய்யக்கூடியவர் தற்போது அவனது அருளால் அவனுக்கு அருகில் வந்துவிடுகின்றார். மேலும் நரகம் மற்றும் இறைத் தண்டனையிலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றார்.

اِنَّ اللّٰہَ یُحِبُّ التَّوَّابِیۡنَ وَیُحِبُّ الۡمُتَطَہِّرِیۡنَ ﴿۲۲۳﴾

என்று அல்லாஹ் கூறுகின்றான்.

நிச்சயமாக தன் பக்கம் திரும்புபவர்களை அல்லாஹ் நேசிக்கின்றான்; (அகமும், புறமும்) தூய்மையாக இருப்பவர்களையும் அல்லாஹ் நேசிக்கின்றான். (2:223)

(மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 114, காதியான் பதிப்பு -2003)

* * * * *

## நபிமொழி

**இரண்டு பெருநாள் இரவிலும் தஹஜ்ஜுத் தொழக்கூடியவரின் உள்ளம் நிரந்தரமாக உயிர்ப்பிக்கப்படும்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த நபர் இரண்டு பெருநாள் இரவுகளில் அல்லாஹ்விற்காக மட்டும் இறைவணக்கம் செய்வாரோ அவரது உள்ளம் நிரந்தரமாக உயிர்ப்பிக்கப்படும். மேலும் அனைத்து உலகத்தின் உள்ளமும் மரணித்து - விடும்போதும் அவரது உள்ளம் மரணிக்காது.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுஸ்ஸியாம், பாப் ஃபீய் மன் காம ஃபீய் லைலத்துல் ஈய்தைன், ஹதீஸ்- 1782)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களது பெருநாள்களை இறைவனின் மேன்மையை எடுத்துரைத்தவாறு அழகுபடுத்துங்கள்.

(கன்ஸுல் உம்மால், பாகம் 8, பக்கம் 546, பாப் ஸலாத் ஈதுல் ஃபித்ர், ஹதீஸ் 24094, பதிப்பு பெய்ரூத் 1985)

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தக்பீர்,தஹ்லீல் மற்றும் புகழை, தூய்மையை எடுத்துரைத்தவாறும், இறைவனின் பரிசுத்தத் தன்மையை எடுத்துரைத்தவாறும் உங்களது பெருநாள்களுக்கு அழகு சேருங்கள். (கன்ஸுல் உம்மால், பாகம் 8, பக்கம் 546, பாப் ஸலாத் ஈதுல் ஃபித்ர், ஹதீஸ் 24095, பதிப்பு பெய்ரூத் 1985)

(ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நவம்பர் 14, 2004 அன்று நிகழ்த்திய ஜுமுஆ பேருரையிலிருந்து இந்த ஹதீஸ்கள் எடுக்கப்பட்டுள்ளன)

* * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**எனவே நாமும் இந்த மாதத்தில் குறிப்பாக, திருக்குர்ஆனை ஓதுவது, கேட்பது மற்றும் அதன் விளக்கவுரையைப் படிப்பது, கேட்பது ஆகியவற்றின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.**

**MTA விலும் இதற்கான நிகழ்ச்சிகள் வருகின்றன. தர்ஸ்ஃம் வருகிறது. இதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள்.**

**நாம் திருக்குர்ஆனை ஓதுவதுடன், அதன் மொழியாக்கம் மற்றும் விளக்கவுரைப் படித்தால் தான்; கேட்டால் தான் நம்மால் அதில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அந்தக் கட்டளைகளின் முக்கியத்துவத்தைப் புரிய முடியும். அவற்றை நம் வாழ்வின் அங்கமாக்க முடியும். நம் வாழ்வைத் திருக்குர்ஆனின் போதனைகள் படி அமைத்துக் கொள்ள முடியும். மேலும் அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கக்கூடியவர்களாக ஆக முடியும்.**

**எனவே ரமலானில் உண்மையான அருட்களைப் பெற வேண்டும் என்றால், திருக்குர்ஆன் ஓதுவது மற்றும் அதில் ஆழ்ந்து கவனம் செலுத்துவது ஆகியவற்றின் பக்கமும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்**

**திருக்குர்ஆன் நிரந்தரமான, என்றென்றைக்குமான ஷரீஅத்தாகும்**

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தகுதி, திறன் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் வட்டம் மிகவும் விசாலனமானதாக இருந்தது. எனவே அன்னாருக்குக் கிடைத்த இறையறிவிப்பும் எந்த அளவு அந்தஸ்தும் தகுதியும் உடையது என்றால், அந்தத் தகுதியும் துணிவும் உடையவர் ஒருவர் இனிமேல் பிறக்க மாட்டார்**

**திருக்குர்ஆன் போதனைகளின் கருவூலம் ஆகும்**

**திருக்குர்ஆனில் இந்த சிறப்பு உள்ளது; அதன் ஒவ்வொரு கட்டளையும் நோக்கங்களாலும், சீர்திருத்தத்தாலும் ததும்பியுள்ளது**

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 31 மார்ச் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **31ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

தற்போது நாம் ரமலான் மாதத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம். இது எத்தகைய மாதம் என்றால், இதில் ஓர் ஆன்மிக சூழல் உருவாகி விடுகிறது. மேலும், நம்பிக்கை கொண்டவர்களின் ஜமாஅத்தில் இந்த சூழல் உருவாக வேண்டும். இந்த மாதத்தில் நோன்புகளுடன் சேர்த்து இறை வணக்கங்களின் பால் அதிக கவனம் ஏற்படுகிறது; ஏற்படவும் வேண்டும். திருக்குர்ஆனை ஓதுவது, கேட்பது ஆகியவற்றின் பால் அதிக கவனம் ஏற்படுகிறது.

நோன்புகளின் உண்மையான பலனைப் பெற வேண்டும் எனில், இறைவழிபாடுகளுடன் திருக்குர்ஆனை ஓதுவது மற்றும் அதைக் கேட்பதன் பாலும் அதிக கவனம் ஏற்பட வேண்டும்.

ரமலானுக்கு திருக்குர்ஆனுடன் ஒரு சிறப்பான தொடர்பு உள்ளது அல்லது திருக்குர்ஆனுக்கு ரமலானுடன் தொடர்பு உள்ளது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

شَهْرُ رَمَضَانَ الَّذِيْٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ
هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى وَالْفُرْقَانِ

அதாவது ரமலான் மாதம் திருக்குர்ஆன் இறக்கப்பட்ட மாதம் ஆகும். அந்தக் குர்ஆன் எல்லா மனிதர்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதாக ஆக்கி அனுப்பப்பட்டு உள்ளது. அது தெளிவான சான்றுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அந்தச் சான்றுகள் நேர்வழியினை உருவாக்குகின்றன. மேலும், (அத்துடன் திருக்குர்ஆனில்) இறை அடையாளங்களும் உள்ளன.

சில நம்பகமான அறிவிப்புகள் இதையும் கூறுகின்றன: ரமலான் 24 ஆம் தேதி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முதல் வஹீ இறக்கப்பட்டது. (சுனன் அல்குப்ரா லில்பைஃகீ,கிதாப் அல்ஜஸ்யா, தொகுதி 9, பக்கம் 317, ஹதீஸ் -18649, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் -2003 பதிப்பு) இவ்வாறே, ஒவ்வோர் ஆண்டும் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து ஒருமுறை திருக்குர்ஆனை முழுமையாக ஓதி முடித்து வந்தார்கள். மேலும், கடைசி வருடம் இரண்டு முறை முழுமையாக ஓதி முடிக்கப்பட்டது. (ஸஹீஹ் அல்புகாரி, கிதாப் ஃபளாயிலுல் குர்ஆன், பாப் கான ஜிப்ரீல யஃரிழுல் குர்ஆன், அலன்னபிய்யீ (ஸல்) ஹதீஸ் - 4998)

எவ்வாறு இருப்பினும், ரமலான் சம்பந்தமாக திருக்குர்ஆனுக்கு ஒரு சிறப்பான முக்கியத்துவம் உள்ளது. எனவே நாமும் இந்த மாதத்தில் குறிப்பாக, திருக்குர்ஆனை ஓதுவது, கேட்பது மற்றும் அதன் விளக்கவுரையைப் படிப்பது, கேட்பது ஆகியவற்றின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

MTA விலும் இதற்கான நிகழ்ச்சிகள் வருகின்றன. தர்ஸ்ஃம் வருகிறது. இதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள். நாம் திருக்குர்ஆனை ஓதுவதுடன், அதன் மொழியாக்கம் மற்றும் விளக்கவுரைப் படித்தால் தான்; கேட்டால் தான் நம்மால் அதில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அந்தக் கட்டளைகளின் முக்கியத்துவத்தைப் புரிய முடியும். அவற்றை நம் வாழ்வின் அங்கமாக்க முடியும். நம் வாழ்வைத் திருக்குர்ஆனின் போதனைகள் படி அமைத்துக் கொள்ள முடியும். மேலும் அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கக்கூடியவர்களாக ஆக முடியும்.

எனவே ரமலானில் உண்மையான அருட்களைப் பெற வேண்டும் என்றால், திருக்குர்ஆன் ஓதுவது மற்றும் அதில் ஆழ்ந்து கவனம் செலுத்துவது ஆகியவற்றின் பக்கமும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். எங்கெல்லாம் பள்ளிவாசல்களில் தர்ஸ் கேட்பதற்கான ஏற்பாடு இருக்கிறதோ அங்கு தர்ஸ்ஃம் கேட்க வேண்டும்.

**திருக்குர்ஆனின் முக்கியத்துவம் இதன் சிறப்புகள் மற்றும் இதன் ஒளிமிக்க ஆதாரங்கள் தொடர்பாக இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு மிகவும் தெளிவுபட கூறியுள்ளார்கள். சில காலமாக நான் குத்பாக்களில் இதைக் கூறிவருகின்றேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதாக பல மேற்கோள்களைக் கூறுகின்றேன். எனவே, இவற்றை மீண்டும் மீண்டும் கேட்பது, படிப்பது மற்றும் இவற்றின் மீது ஆழ்ந்து கவனம் செலுத்துவது ஆகியவற்றின் தேவை உள்ளது. அப்போதுதான் நம்மால் இதைப் பற்றிய சரியான புரிதலை நம்மிடம் உருவாக்க முடியும்.** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்கள் தொடர்பாகவே இன்றும் நான் சில மேற்கோள்களை முன் வைப்பேன்.

திருக்குர்ஆன் நிரந்தரமான, என்றென்றைக்குமான ஷரீஅத்தாகும்

என்பதை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: வல்ல இறைவனின் நுட்பங்களும், கட்டளைகளும் இரு வகைப்படும். சில நிரந்தரமானவையாக, என்றென்றைக்குமானவையாக இருக்கின்றன. சில குறிப்பிட்ட நேரத்திற்கும், தற்காலிக தேவையின் அடிப்படையிலும் பிறப்பிக்கப்படுகின்றன.

எனினும் இவற்றிலும் இவற்றிற்கென ஒரு நிரந்தரத் தன்மை இருக்கிறதுதான். தற்காலிக தேவைக்காக இருப்பினும், இவை நிரந்தரமான கட்டளைகள் ஆகும். ஆனால், அவை தற்காலிகமாக இருக்கும். உதாரணமாக, பயணத்திற்குத் தொழுகை மற்றும் நோன்பு தொடர்பாக வேறு கட்டளைகள் உள்ளன. பயணம் இல்லாமல் ஓரிடத்தில் இருக்கும் நிலையில் வேறு உள்ளன. உதாரணமாக, தொழுகையைப் பயணத்தில் ஜம்மு செய்து கொள்வதற்கும் கஸ்ர் செய்து தொழுவதற்கும் அனுமதி உள்ளது.

சாதாரண நேரத்தில் தொழுகையை முழுமையாக தொழ வேண்டும். இதேபோன்று நோன்புகள் இருக்கின்றன. பயணத்தில் ஓரிடத்தில் தங்கி இருக்கும்போது வைக்க வேண்டும். உடல் ஆரோக்கியம் பெற்ற ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.

பிறகு கூறினார்கள்: உதாரணமாக, இன்னொரு கட்டளை உள்ளது.

பெண் வெளியே செல்லும்போது புர்கா அணிந்து செல்கிறாள். இது எப்படிப்பட்ட ஒரு கட்டளை என்றால், அது பெண்ணுக்கு ஒரு குறிப்பிட்ட சூழலில் உள்ளது. வீட்டில் புர்கா அணிந்து இருப்பதற்கான தேவை இருப்பதில்லை. பர்தா அணிவதற்கான கட்டளை உள்ளது என்றால் வீட்டிற்கு வெளியில் பர்தா அணிவதற்கான கட்டளை உள்ளது. பிறகு, யார்? யார்? முன் பர்தா செய்ய வேண்டும்? யார்? யார்? முன் பர்தா செய்ய வேண்டாம்? என்று உள்ளது. அடுத்து, தவ்ராத் மற்றும் இஞ்சீலின் போதனைகளுடன் ஒப்பிட்டவாறு அன்னார் (அலை) கூறினார்கள்:

அவையோ தற்காலிகமானதாக இருந்தன. தற்காலிக தேவைகளுக்கு ஏற்ப இருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த ஷரீஅத்தை திருமறையைக் கொண்டு வந்தார்களோ அந்தத் திருமறை நிரந்தரமான என்றென்றைக்குமான ஷரீஅத் ஆகும். எனவே, அதில் கூறப்பட்டுள்ள அனைத்தும் முழுமையானதும், நிறைவானதும் ஆகும். திருக்குர்ஆன் நிரந்தரமான சட்டமாகும். திருக்குர்ஆன் வராமல் இருந்திருந்தாலும், தவ்ராத்தும் இஞ்சீலும் ரத்தாகியிருக்கும். ஏனெனில், அவை நிரந்தரமான, என்றென்றைக்குமான மார்க்கச் சட்டமாக இருக்கவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 42, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே திருக்குர்ஆனுக்கு இந்த ஒரு முக்கியத்துவம் உள்ளது. அதாவது திருக்குர்ஆனின் வழிகாட்டல்கள் ஒவ்வொரு சூழ்நிலைக்கு ஏற்ப உள்ளன. மிகவும் முழுமையான போதனையாகவும் ஒவ்வொரு காலத்திற்காகவும் இருக்கின்றன. ஆட்சேபனை செய்யக்கூடியவர்கள் உதாரணமாக, பர்தா பற்றிய உதாரணத்தைக் கூறினேனே அதிலும் ஆட்சேபனை செய்து விடுகிறார்கள். அதாவது இந்தக் காலத்தின் அடிப்படையில் பர்தா அவசியம் இல்லை என்கிறார்கள். சிலவேளை நம் பெண் பிள்ளைகளும் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள்.

ஆனால், இந்த மக்கள் தாமே இந்த விஷயத்தை ஏற்றும் கொள்கின்றார்கள். அது பற்றி பெரும் பெரும் கட்டுரைகள் எழுதப்படுகின்றன. பெண் அமைப்புகளும் இப்போது குரல் எழுப்ப ஆரம்பித்துவிட்டன. பத்திரிகைகளிலும் சில சமயம் வர ஆரம்பித்து விடுகிறது. அதாவது, ஆண்கள் பெண்கள் ஒருவர் மற்றவருடன் கலந்துவிடுவது, சிலவேளை பெரும் அருவருப்புகளை உருவாக்கி விடுகிறது. அதன் சில மக்கள் தனித்தனி அமைப்பு இருக்க வேண்டும் என்று இப்போது சிந்திக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

அடுத்து, தமது வருகையின் நோக்கத்தையும் திருக்குர்ஆன் நிரந்தரமான ஷரீஅத் ஆக இருப்பது பற்றியும் எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இந்த விஷயத்தையும் உள்ளத்தால் செவிமடுங்கள். எனது வருகையின் அசல் நோக்கம் என்ன? எனது குறிக்கோள் என்ன? நான் வந்ததன் நோக்கமும் குறிக்கோளும் இஸ்லாத்தைப் புதுப்பிப்பதும் அதற்கு ஆதரவு அளிப்பதும் மட்டுமே ஆகும். இதன் மூலமாக நான் ஏதாவது புதிய ஷரீஅத்தைக் கற்றுக் கொடுப்பதற்காக வந்துள்ளேன் என்றோ அல்லது புதிய கட்டளைகளைப் பிறப்பிப்பதற்காக வந்துள்ளேன் என்றோ அல்லது ஏதாவது புதிய மறை இறங்கும் என்றோ இருக்கக் கூடாது. ஒருபோதும் இல்லை! யாராவது இவ்வாறு நினைத்தால் என்னைப் பொருத்தவரை அவர் கடுமையான வழிகேட்டிலும் மார்க்கம் அற்றவராகவும் உள்ளார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஷரீஅத்தும், நபித்துவமும் நிறைவு பெற்றது. இப்போது எந்த ஷரீஅத்தும் வர முடியாது. திருக்குர்ஆன் இறைமறைகளில் இறுதியானது. அதில் இப்போது ஒரு புள்ளியோ சூழியோ கூடவோ குறையவோ முடியாது. எனினும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பரக்கத்துகள், அருள்கள் மற்றும் திருக்குர்ஆனின் போதனைகள், வழிகாட்டல்கள் ஆகியவற்றின் கனிகள் முடிவு பெற்றுவிடவில்லை. அவை எல்லாக் காலத்திலும் புத்தம் புதிதாக உள்ளன.

அந்த அருட்கள் மற்றும் பரக்கத்துகளுக்கு சான்றளிப்பதற்காகவே இறைவன் என்னை நிறுத்தினான். அதாவது, திருக்குர்ஆனின் போதனைகளை ஒவ்வொருவராலும் புரிய முடியாது. சில விஷயங்கள் விளக்க வேண்டியவை ஆகும். விரிவுரையை நாடுகின்றன. அவற்றை எடுத்துரைப்பதற்காக அல்லாஹ் இந்த இறுதி காலத்தில் என்னை அனுப்பியுள்ளான் என்று அன்னார் (அலை) கூறுகின்றார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 245, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனைப் போன்ற ஓர் அற்புதம் இதற்கு முன்னும் இருந்ததில்லை ; இனிமேலும் வரவப்போவதில்லை. முன்னரும் அதற்கு நிகர் ஏதுமில்லை; பின்னரும் கிடைக்க முடியாது. அதன் அருளும், வளமும் என்றென்றும் நீடித்திருக்கக் கூடியவை. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்தது போன்றே எந்தக் காலத்திலும், தெளிவாகவும் பசுமையாகவும் இருக்கக் கூடியதாகும்.

இது மட்டுமின்றி, இன்னும் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரின் கூற்றும் அவரது தகுதிக்கேற்பவே இருக்கும். அவரது துணிவு, உறுதி மற்றும் உயர்வான குறிக்கோள் இருக்கும் அளவுக்கு ஏற்ப அதே தரத்தில் அந்தக் கூற்றும் இருக்கும். இறை அறிவிப்பிலும் இதே நிலைதான் இருக்கின்றது. எவ்வாறு சாதாரண மனிதனின் அறிவுக்கு ஏற்ப உரையாடுகிறானோ அதேபோன்று இறையறிவிப்பிற்கும் ஓர் அந்தஸ்து உள்ளது. எந்த நபருக்கு அவனது வஹீ இறங்குகிறதோ அவர் கொண்டிருக்கும் உயர் தகுதிக்கு ஏற்பவே அதே தரத்திலான இறையறிவிப்பு அவருக்குக் கிடைக்கிறது.

இங்கும் இதை நினைவில் கொள்ள வேண்டும். வஹீக்கும் படித்தரங்கள் உள்ளன. அல்லாஹ்வின் தூதுச் செய்திக்கும் படித்தரங்கள் உள்ளன. பிறகு, கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தகுதி, திறன் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் வட்டம் மிகவும் விசாலமானதாக இருந்தது. எனவே அன்னாருக்குக் கிடைத்த இறையறிவிப்பும் எந்த அளவு அந்தஸ்தும் தகுதியும் உடையது என்றால், அந்தத் தகுதியும் துணிவும் உடையவர் ஒருவர் இனிமேல் பிறக்க மாட்டார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 57, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனின் போதனையின் வட்டம் மிகவும் விசாலமானது. அது கியாமத் வரை மாறாத கட்டளையாக இருக்கும். ஒவ்வொரு சமுதாயம் மற்றும் ஒவ்வொரு காலத்திற்காகவும் இருக்கும். எனவே அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِنۡ مِّنۡ شَیۡءٍ اِلَّا عِنۡدَنَا خَزَآئِنُهٗ وَمَا نُنَزِّلُهٗۤ اِلَّا بِقَدَرٍ مَّعۡلُوۡمٍ

அதாவது எம்முடைய கருவூலங்களிலிருந்து குறிப்பிட்ட ஓர்

அளவிலேயே நாம் இறக்குகின்றோம்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இஞ்சீலின் தேவை ஓரளவே இருந்தது. எனவே, ஒரே ஒரு பக்கத்தில் இஞ்சீலின் சுருக்கம் வர முடியும். ஆனால், திருக்குர்ஆனின் தேவைகளோ எல்லாக் காலங்களின் சீர்திருத்தமாக இருந்தது. ஒவ்வொரு காலத்தையும் சீர்திருத்துவதாக இருந்தது.

திருக்குர்ஆனின் நோக்கம் காட்டுமிராண்டி எனும் நிலையில் இருந்து மனிதனாக ஆக்குவதாக இருந்தது. ஷரீஅத்தின் எல்லைகள் மற்றும் கட்டளைகளுடன் படித்தரங்களைக் கடந்து செல்வதற்காக மனித ஒழுக்கங்களால் பண்பட்ட மனிதனாக ஆக்குவதாக இருந்தது. பிறகு, இறைவனோடு இணைந்த மனிதனாக ஆக்குவதாக இருந்தது. ஆக, இந்தச் சொற்கள் சுருக்கமானவைதான்; எனினும், அவற்றின் துறைகள் ஆயிரம் உள்ளன.

யூதர்கள், இயற்கை வாசிகள், நெருப்பு வணங்கிகள் மற்றும் பல்வேறு சமுதாயங்களில் தீய நடத்தை எனும் ஆன்மா செயலாற்றிக் கொண்டிருந்தது.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறையறிவிப்பால் அதாவது, அல்லாஹ் வழங்கிய அறிவால் அதற்கு ஏற்ப அனைவரையும் பார்த்து இவ்வாறு கூறினார்கள்:

يَآيُّهَا النَّاسُ اِنِّيْ رَسُوْلُ اللّٰهِ اِلَيْكُمْ جَمِيْعًا

பொருள்: நீர் கூறுவீராக! மனிதர்களே! நிச்சயமாக நான் உங்கள் அனைவரையும் நோக்கி அனுப்பப்பட்டுள்ள அல்லாஹ்வின் தூதர் ஆவேன். (7:159)

எனவே, அவ்வப்போது இருந்து வந்துள்ள அந்தப் போதனைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக திருக்குர்ஆன் இருந்திருக்க வேண்டிய அவசியம் இருந்தது. மேலும், வானத்தில் இருந்து பல்வேறு காலகட்டத்தில் பல்வேறு நபிமார்கள் மூலமாக பூமியில் வசிப்பவர்களுக்கு எட்டவைக்கப்பட்டு வந்த அந்த அனைத்து உண்மைகளையும் தன்னுள் கொண்டிருக்க வேண்டியது அவசியமாக இருந்தது.

அதாவது, சூழ்நிலைக்கு ஏற்ப இருந்த பழைய விஷயங்களையும் தன்னுள் கொண்டிருக்க வேண்டும். இவை திருக்குர்ஆனில் உள்ளன. மேலும் கூறினார்கள்:

திருக்குர்ஆன் மனித குலம் முழுவதையும் கருத்தில் கொண்டுள்ளது. எந்தவொரு குறிப்பிட்ட சமுதாயத்தையோ நாட்டையோ காலத்தையோ மட்டுமே கருத்தில் கொண்டிருக்கவில்லை. ஆனால், இஞ்சீல் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை மட்டுமே கருத்தில் கொண்டிருந்தது. எனவேதான் ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்கள், நான் இஸ்ரவேல் சமுதாயத்தின் தொலைந்துபோன ஆடுகளைத் தேடுவதற்காக வந்திருக்கின்றேன் என்று மீண்டும் மீண்டும் கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 86, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையால் நான் முழு உலகிற்கும் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன் என்று அறிவிப்பு செய்தது திருக்குர்ஆன் முழு உலகிற்கும் நேர்வழிக்கான வழிவகையாகும் என்ற விஷயத்திற்கும் சான்றாகும். பழைய சமுதாயங்களுக்கும் அவர்களின் நிலைமைகளுக்கு ஏற்ப அவர்களுக்குக் கூறிவிட்டது. புதிதாக வரக்கூடியவர்களுக்கும் அதில் கட்டளைகள் உள்ளன.

ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய இது ஒன்றே நிரந்தரமான ஷரீஅத் ஆகும். இதைத் தவிர, வேறு எந்த ஷரீஅத்தும் இல்லை. திருக்குர்ஆன் போதனைகளின் கருவூலம் ஆகும்; பொக்கிஷம் ஆகும் என்பதை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் நுட்ப ஞானமும் நிரந்தரமான ஷரீஅத்தும் ஆகும். எல்லாப் போதனைகளின் கருவூலமாகும். இவ்வாறு திருக்குர்ஆனின் முதல் அற்புதம் உயர்தரமான போதனையாகும். பிறகு, திருக்குர்ஆனின் இரண்டாவது அற்புதம் அதன் மகத்துவ மிக்க முன்னறிவிப்புகள் ஆகும். ஆக, சூரா ஃபாத்திஹா, சூரா தஹ்ரீம் மற்றும் சூரா யூனுஸ் ஆகியவற்றில் எவ்வளவு பெரிய மகத்துவ மிக்க முன்னறிவிப்புகள் உள்ளன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மக்கத்து வாழ்வு முழுவதும் முன்னறிவிப்புகளால் நிரம்பியுள்ளது.

ஓர் அறிவாளி இறைவனுக்கு அஞ்சியவாறு இவற்றில் ஆழ்ந்து கவனம் செலுத்தினால் எந்த அளவு மறைவான செய்திகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தன என்பது அவருக்குத் தெரிந்து விடும். முழு சமுதாயமும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிராக இருந்தபோது, மேலும் எந்தவோர் அனுதாபியோ தோழரோ இல்லாதபோது سَيُهْزَمُ الْجَمْعُ وَيُوَلُّوْنَ الدُّبُرَ (54:46) என்று கூறுவது சிறிய விஷயமாக இருக்க முடியுமா?

அதாவது, இதன் பொருள்: அவர்களின் கூட்டம் தோற்கடிக்கப்படும். அது புறமுதுகிட்டு ஓடிவிடும் என்பதாகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இது ஒரு சின்ன விஷயமாக இருக்க முடியுமா? காரணிகள் அடிப்படையிலோ அவர்கள் அழிந்து விடுவார்கள் என்று ஏதாவது தீர்ப்பு வழங்கப்பட்டு வந்தது. ஏதாவது காரணிகள் இருந்தால் அவர்கள் அழிந்து விடுவார்கள் என்று கூறப்படலாம். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அத்தகைய (ஒரு) நிலையில் தமது வெற்றியைப் பற்றியும் எதிரிகளின் இழிவு மற்றும் தோல்விகளை பற்றியும் முன்னறிவிப்புகள் செய்கின்றார்கள். இறுதியில் அவ்வாறே நடந்தேறுகிறது.

திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள இந்த முன்னறிவிப்பை அல்லாஹ் அன்னாருக்கு மக்காவில்; அதுவும் ஆரம்ப நிலையில் வழங்கினான். அப்போதோ கண்ணியத்திற்குரிய மக்காவில் அன்னாரின் நிலை மிகவும் பலவீனமாக இருந்தது. பிறகு, முன்னறிவிப்பு எவ்வாறு நிறைவேறியது? பொதுவாக அகழ் போரில் இது பொருத்தப்படுவதை நாம் பார்க்கின்றோம் - மற்ற இடங்களிலும் பொருந்துகிறது- அப்போது நிராகரிப்பாளர்களின் பெரும் படை முஸ்லிம்கள் முன் புறமுதுகிட்டு ஓடிவிட்டது.

பிறகு, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

பிறகு, 1300 ஆண்டுகளுக்குப் பிறகு உருவாகவிருந்த இயக்கத்தைப் பற்றிய அந்த நேரத்தின் தடயங்கள் மற்றும் அடையாளங்கள் பற்றிய முன்னறிவிப்புகள் எந்த அளவு மகத்துவம் மிக்கவையாகவும் நிகரற்றவையாகவும் உள்ளன. அதாவது, வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தைப் பற்றிய முன்னறிவிப்புகள் எந்த அளவு மகத்துவ மிக்கவையாகும் என்று அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

பலவற்றை குறித்து, நான் முன்னர் கடந்த குத்பாவில் குறிப்பிட்டுள்ளேன். இப்போது வரை மிகவும் கம்பீரமான முறையில் நிறைவேறுகின்றன. அன்னார் (அலை) கூறினார்கள்: உலகின் ஏதாவது ஒரு வேதத்தின் முன்னறிவிப்பை எடுத்து வையுங்கள். ஈஸா மஸீஹின் முன்னறிவிப்புகள் இவற்றோடு போட்டி போட முடியுமா?

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 43- 44, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு, திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையும் நோக்கங்களால் நிரம்பியது என்று திருக்குர்ஆனின் சிறப்புகளை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறகின்றார்கள்:

திருக்குர்ஆனில் இந்த சிறப்பு உள்ளது; அதன் ஒவ்வொரு கட்டளையும் நோக்கங்களாலும், சீர்திருத்தத்தாலும் ததும்பியுள்ளது. அதாவது, நோக்கங்களாலும் ,சீர்திருத்தத்தாலும் நிறைந்துள்ளது. அதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது. எனவே, திருக்குர்ஆனில் ஆங்காங்கே அறிவுடனும், புரிதலுடனும், புத்திசாலித்தனமாக சிந்தித்தும் ஈமானுடன் செயல்படுங்கள் என்று வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஃபகாஹத் புத்திசாலித்தனமாக சிந்தித்து செயல்படுங்கள் என்பதாகும். மேலும், ஈமானுடன் செயல்படுங்கள் என்று உள்ளது. ஈமானும் அவசியமானது.

திருக்குர்ஆனுக்கும் மற்ற வேதங்களுக்கும் இதுதான் வித்தியாசம் ஆகும். வேறு எந்த வேதமும் தனது போதனையை அறிவு மற்றும் ஆழ்ந்து சிந்தித்தல் எனும் நுணுக்கமான சுதந்திரமான ஆராய்ந்து பார்த்தலுக்கு முன்னால் இடுவதற்கு துணியவில்லை.

அன்னார் (அலை) இஞ்சீலின் உதாரணத்தை வழங்கியவாறு கூறினார்கள்:

இஞ்சீலின் போதனை அறிவின் அழுத்தத்துக்கு எதிரில் வெறும் உயிரற்றதாக இருக்கிறது என்ற சிந்தனையால் சாமர்த்தியமான மற்றும் தந்திரமான இஞ்சீலின் ஆதரவாளர்கள் மிகவும் சாதுர்யமான முறையில் தமது கொள்கைகளில் இந்த விஷயத்தை இணைத்துக் கொண்டார்கள். அதாவது முத்தெய்வக் கொள்கை மற்றும் ஈடேற்றக் கொள்கை ஆகியவை எப்படிப்பட்ட இரகசியங்கள் என்றால் மனித அறிவால் அவற்றின் ஆழம் வரை சென்றடைய முடியாது என்ற விஷயத்தை இணைத்துக் கொண்டார்கள்.

மிகவும் ஆழமான ஞானம் ஆகும்; அதுவரை உங்களால் சென்றடைய முடியாது; எனவே, எங்கு எப்படி கூறப்படுகிறதோ அவ்வாறே, அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறப்படுகிறது. ஆனால், அதற்கு நேர்மாறாகத் திருக்குர்ஆனில் போதனை இவ்வாறு உள்ளது:

إِنَّ فِي خَلْقِ السَّمٰوٰتِ وَالْأَرْضِ وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ لَاٰيٰتٍ لِّأُولِي الْأَلْبَابِ. الَّذِيْنَ يَذْكُرُوْنَ اللّٰهَ

அதாவது வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பும், இரவும் பகலும் மாறி மாறி வருவதும் அறிவுடையோருக்கு அந்த அல்லாஹ்வைப் பற்றி தெளிவாக எடுத்துரைக்கின்றன. (3:191-192) இதன் பக்கமே இஸ்லாம் மார்க்கம் அழைப்பு விடுக்கின்றது. இந்த வசனத்தில் அறிவுடையோர் தங்களது அறிவுடைமை மற்றும் சிந்தனையாலும் செயல்பட வேண்டும் என்றும் ஆழ்ந்து சிந்தியுங்கள் என்றும் எந்த அளவு தெளிவான கட்டளை உள்ளது.

பிறகு, திருக்குர்ஆன் ஒரு பாதுகாக்கப்பட்ட மறை என்பதையும், திருக்குர்ஆனின் போதனைகளுக்கு இயற்கை நியதியின் மூலம் சான்று பகரப்படுகிறது என்பதையும் எடுத்துரைத்தவாறு திருக்குர்ஆனைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّهُ لَقُرْاٰنٌ كَرِيْمٌ فِيْ كِتٰبٍ مَّكْنُوْنٍ لَّا يَمَسُّهُ إِلَّا الْمُطَهَّرُوْنَ

நிச்சயமாக இது ஒரு கண்ணியத்திற்குரிய திருக்குர்ஆன் ஆகும். மறைந்துள்ள ஒரு வேதமாகும். அதாவது பாதுகாக்கப்பட்ட விஷயம் ஆகும். தூய்மைப்படுத்தப்பட்ட மக்களைத் தவிர, வேறு எவராலும் அதைத் தொட முடியாது.(56:78-80)

அன்னார் (அலை) கூறினார்கள்: இன்னும் சொல்வதாயின், இந்த மறை முழுவதும் இயற்கையின் பாதுகாப்பான பெட்டியில் பாதுகாப்பாக உள்ளது. திருக்குர்ஆன் மறைந்துள்ள ஒரு வேதத்தில் உள்ளது என்பதற்குப் பொருள் என்ன? அதன் இருப்பு காகிதங்கள் வரை மட்டுமே வரையறுக்கப்பட்டு இருக்கவில்லை. மாறாக, அது மறைந்துள்ள ஒரு வேதத்தில் உள்ளது. அதை இயல்பின் மறை என்கிறோம். அதாவது திருக்குர்ஆனின் முழு போதனைகளுக்கு இயற்கைச் சட்டத்தின் ஒவ்வொரு அணுவின் மூலமாக சாட்சியம் பகரப்படுகிறது. அதன் போதனைகளும், அதன் வளங்களும் அழிந்து போகக்கூடிய (வெறும்) கதைகள் அல்ல.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 64-65, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

மாறாக, எவர் அதைப் புரிவாரோ அதன்படி செயல்படுவாரோ அவர் அல்லாஹ்வின் அருட்களைப் பெறவும் செய்வார். ஆனால், இதை நினைவிற் கொள்ள வேண்டும்! அதன் இரகசியங்களும் அதன் ஆழங்களும் தூய மக்களுக்கே திறக்கின்றன. மேலும், அதற்காக தூய மக்களுடன் இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே அந்த நபர் ஆவார்கள். அல்லாஹ் வழங்கிய ஞானத்தால் பலன் பெற்று, அன்னார் அடுத்தவர்களுக்கு எடுத்துரைத்தவற்றை நாம் பார்க்க வேண்டும். ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அதே விளக்கவுரைகள் தான் பின்னர் அடுத்தும், அன்னார் வழங்கிய ஞானத்திற்கு ஏற்ப, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இலக்கியங்களில் எடுத்துரைக்கப்படுகின்றன.

திருக்குர்ஆனுக்கு திக்ர் என்று ஏன் பெயர் வைக்கப்பட்டுள்ளது? என்பது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனுக்கு திக்ர் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. எதனால் என்றால், அது மனிதனின் உட்புற ஷரீஅத்தை நினைவூட்டுகிறது.

பிறகு அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆன் புதிய போதனையை ஒன்றும் கொண்டு வரவில்லை. மாறாக, பல்வேறு ஆற்றல்கள் வடிவில் மனிதனுக்குள் வைக்கப்பட்டுள்ள அந்த உட்புற ஷரீஅத்தை நினைவூட்டுகிறது. இரக்கம், தியாகம், வீரம், நிர்ப்பந்தம், கோபம், சிக்கனம் முதலியவை. சுருக்கமாக இயல்பு அகத்தில் வைத்தவற்றை திருக்குர்ஆன் நினைவூட்டியது.

உதாரணமாக, فِيْ كِتٰبٍ مَّكْنُوْنٍ என்று உள்ளது. அதாவது, இயல்பு எனும் ஏட்டில் மறைந்திருந்த வேதமாக இருந்தது; ஒவ்வொருவராலும் பார்க்க முடியாமல் இருந்த அதை அவனுக்கு நினைவூட்டியது. எனவே, இந்தக் கண்ணோட்டத்திலும் நாம் திருக்குர்ஆனை ஓத வேண்டும். மனிதனின் இயல்பான திறமைகளைத் திருக்குர்ஆன் சரியான இயல்பின் பால் வழிநடத்துகின்றது.

எனவே, இன்றைய நாட்களில் குறிப்பாக, மனிதன் எதை விட்டு விலகுகிறானோ அந்த உண்மையான இயல்பைத் திருக்குர்ஆன் வெளியே எடுத்துக் கூறுகிறது. மேலும், அந்த விலகிச் செல்லல் காரணமாகவே சில ஒழுக்கமற்ற இயல்புக்கு மாற்றமான சட்டம் உருவாக்குவதன் பால் இந்தக் காலத்தில் கவனம் செல்வதை நாம் பார்க்கின்றோம். மனிதன் அதை சீர்கெடுப்பதற்கு முயற்சி செய்கின்றான். அல்லாஹ் கூறினான்:

திருக்குர்ஆனை கவனமாக ஆழ்ந்து சிந்தியுங்கள். அதன்படி செயல்படுதல் உங்களுக்கு மனித இயல்பின் உயர்தரத்தைக் காட்டும். எனவே அதன் மீது ஆழ்ந்து சிந்தனை செலுத்துவது அவசியமாகும்.

இந்தக் கண்ணோட்டத்தில் நாம் திருக்குர்ஆனைப் படிக்கவும் புரியவும் வேண்டும். சுதந்திரம் என்ற பெயரில் இன்றைய நாளில் குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் சிந்தனைகளிலும் நஞ்சு விதைக்கப்படுகிறதே அதிலிருந்து நம்மால் தப்ப முடியும். பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் இருந்து கற்று வரும் விஷயங்களுக்கு நாங்கள் எப்படி பதில் சொல்வது என்று பல பெற்றோர்களும் கேட்கிறார்கள். ஆக, நாம் ஆழ்ந்து சிந்தித்தால், படித்தால், விளக்கவுரையைப் படித்தால் ஜமாஅத் நூல்களை வாசித்தால் அவை திருக்குர்ஆனின் கட்டளைகளின் ஒளியிலேயே இருக்கின்றன. பிறகு, பிள்ளைகளுக்கும் பெற்றோர்களால் பதில் கூற முடியும்.

பிறகு கூறினார்கள்: இவ்வாறே இது படிக்கப்படும்போது இது அக மற்றும் ஆன்மிக ஆற்றல்களையும் விண்ணில் இருந்து மனிதனுக்குள் வைக்கப்பட்டுள்ள அந்த உள்ளத்தின் ஒளியையும் நினைவூட்ட வேண்டும் என்பதற்காக இந்த மறைக்கு திக்ர் என்று பெயர் கூறப்பட்டுள்ளது. சுருக்கமாக அல்லாஹ் திருக்குர்ஆனை அனுப்பி விட்டு சுயமே ஓர் ஆன்மிக அற்புதத்தைக் காட்டினான்.

மீண்டும், மீண்டும் படித்தீர்கள் என்றால், இது உங்களுக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

அப்போது தான் மனிதன் தனக்குத் தெரியாமல் இருந்த அந்த இறைஞானம் உண்மைகள் மற்றும் ஆன்மிக அற்புதங்களைத் தெரிந்து கொள்ள முடியும். ஆனால், வருத்தத்திற்குரிய விஷயம் என்னவெனில் هُدًى لِّلْمُتَّقِيْنَ (இறையச்சம் உடையவர்களுக்கு நேர்வழி காட்டக்கூடியது) எனும் திருக்குர்ஆனின் இந்த அசல் நோக்கத்தை விட்டுவிட்டு அதை வெறும் சில கதைகளின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. சற்றும் பொருட்படுத்தாமல், சுயநலமான முறையில் அரேபியாவின் இணை வைப்பாளர்களைப் போன்று أَسَاطِيْرُ الْأَوَّلِيْنَ (முன்னோர்களின் கதைகள்) என்று கூறி தட்டிக் கழிக்கப்படுகிறது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தோன்றிய, திருக்குர்ஆன் இறங்கிய அந்தக் காலம் இருந்தது. அப்போது, அது உலகில் இருந்து மறைந்து போயிருந்த உண்மைத்துவங்களை நினைவூட்டுவதற்காக வந்திருந்தது. இப்போது எத்தகைய காலம் வந்து விட்டது என்றால் இதைப் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)

அவர்கள், மக்கள் திருக்குர்ஆனை ஓதுவர்; ஆனால் அது அவர்களின் தொண்டைக்குக் கீழ் இறங்காது என்று முன்னறிவித்திருந்த அந்தக் காலம் வந்துவிட்டது.

இதையே நாம் பார்க்கின்றோம். எண்ணற்ற காரீமார்கள் இருக்கின்றார்கள். ஓதக்கூடியவர்கள் எண்ணற்றோர் இருக்கின்றார்கள். ஆனால், அமல் ஏதும் இல்லை.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

எனவே மக்கள் திருக்குர்ஆனை எவ்வளவு அழகாக உன்னதமான கிராஅத்தில் ஓதுகிறார்கள் என்று இப்போது நீங்கள் இந்தக் கண்களால் பார்க்கின்றீர்கள். ஆனால், அது அவர்களின் தொண்டைக்குக் கீழ் இறங்கவதில்லை. அமல் ஏதும் இல்லை. எனவே, திக்ர் எனும் இன்னொரு பெயரைக் கொண்ட திருக்குர்ஆன் எவ்வாறு அந்த ஆரம்ப காலத்தில் மனிதனுக்குள் மறைந்திருந்த, மறந்துபோயிருந்த உண்மைகளையும் (உள்) வைக்கப்படிருந்தவற்றையும் நினைவூட்டுவதற்காக வந்திருந்ததோ, (அவ்வாறே) إِنَّا لَهُ لَحَافِظُونَ (நிச்சயமாக நாமே அதைப் பாதுகாப்போம் என்ற) அல்லாஹ்வின் உறுதியான வாக்குறுதியின் அடிப்படையில் இந்தக் காலத்திலும் விண்ணிலிருந்து ஓர் ஆசிரியர் வந்தார். அவர் اٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ என்பதற்கு உரியவராகவும் வாக்களிக்கப்பட்டவராகவும் இருக்கிறார். அவர் உங்கள் மத்தியில் பேசும் அந்த நபரே ஆவார்.

தம்மைப் பற்றி அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: முஸ்லிம்கள் அறிவுடன் செயல்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். அவர்கள் இறைவன் அனுப்பிய அந்த நபர் கூறுவதைக் கேட்க வேண்டும். தம்முடைய அக நிலையைப் பார்க்க வேண்டும். காலத்தின் தேவையைப் பார்க்க வேண்டும். முஸ்லிம்களின் பொதுவான நிலையைப் பார்க்க வேண்டும். வெளிப்புற மார்க்கத் தீர்ப்புகளில் மட்டும் அழுத்தம் கொடுத்து இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுவதற்கு முயற்சி செய்யக்கூடாது. திருக்குர்ஆனின் உண்மைத் தன்மையைப் புரிய வேண்டும். எவ்வாறாயினும், அஹ்மதிகளான நாம் எந்த அளவு திருக்குர்ஆனின் போதனைகளைப் புரிகின்றோம்; அதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்கிறோம்; மனனம் செய்கிறோம் என்று எப்பொழுதும் நம்மை சுய ஆய்வு செய்து கொண்டே இருக்க வேண்டும்.

பிறகு, திருக்குர்ஆன் உண்மையான ஞானங்களை அறிந்து கொள்ள வைக்கிறது என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

தனக்கு மக்கள் அஞ்ச வேண்டும் என்று அல்லாஹ் எதிர்பார்ப்பதுபோல் மக்களிடம் ஞானங்களின் ஒளி உருவாகிட வேண்டும் என்றும் விரும்புகின்றான். வெறும் அச்சம் மட்டுமல்லாமல் அதற்கும் மேற்பட்டு ஞானங்களின் ஒளியும் உருவாகி விடவேண்டும். அதன் மூலமாக அவர்கள் இறை ஞானத்தின் படித்தரங்களைக் கடந்து கொண்டு செல்ல வேண்டும். ஏன் உருவாக வேண்டும்? இறை ஞானம் உருவாவதற்காக (ஒளி) உருவாக வேண்டும். சிந்தனைகள் விசாலமாக வேண்டும்.

ஏனெனில், உண்மையான ஞானங்களை அறிந்து கொள்வது ஒருபுறம் உண்மையான இறையச்சத்தை உருவாக்குகின்ற அதேவேளையில் மறுபுறம் அந்த ஞானங்கள் மூலமாக இறைவணக்கமும் உருவாகிறது.

ஒரு நம்பிக்கையாளர் இவ்வாறு சிந்திக்கும்போது ஆழ்ந்து கவனம் செலுத்தும்போது மேலும், உலக ஞானங்களாக அவர் பெற்ற ஞானங்களையும் திருக்குர்ஆனுக்கு ஏற்ப (பொருத்தி) வைத்துப் பார்க்கும் பொழுது பிறகு அந்த இறைஞானம் உருவாகிறது. இறைவன் மீதான அச்சமும் உருவாகிறது. இறையச்சம் உருவாகிறது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஆனால் சில துர்பாக்கியசாலிகள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால், அவர்கள் (உலக) அறிவுகளில் மூழ்கி இறை நியதியை விட்டும் தொலைவில் சென்று கிடக்கின்றார்கள். அல்லாஹ்வின் இருப்பின் மீதே சந்தேகங்களை உருவாக்கிக் கொண்டு அமர்ந்திருக்கின்றார்கள். சிலர் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் இறை நியதியை ஏற்றுக் கொண்டு ஞானங்களை முற்றிலும் கை நழுவ விடுகின்றார்கள். ஒன்று ஒருபுறம் ஒரு சாரார் உலக அறிவுகள் என்ற பெயரில் புதிய அறிவுகள் என்ற பெயரில் இறைவனை மறந்து விட்டார்கள் அல்லது அல்லாஹ்வின் பக்கம் வருதல் என்ற பெயரில் ஞானங்களைக் கண்டு பதற்றம் அடைந்து விட்டார்கள். அதைவிட்டு விட்டார்கள். அது தவறு என்று கூறிவிட்டார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஆனால், திருக்குர்ஆன் இரண்டு போதனைகளையும் வழங்கி இருக்கிறது; (அதுவும்) முழுமையான முறையில் வழங்கியிருக்கிறது. திருக்குர்ஆன் உண்மையான ஞானங்களை அறிய வைக்க ஏன் விரும்புகிறது? என்றால், மேலும் ஏன் மனிதனுக்கு இதன் பக்கம் கவனமூட்டுகிறது என்றால் அதன் மூலமாக இறைவன் மீது அச்சம் உருவாகி விடுகிறது. மேலும், இறைஞானத்தில் ஒரு மனிதன் முன்னேற முன்னேற அதே அளவு இறைவனின் மகத்துவம் மற்றும் அவன் மீது நேசம் உருவாகிறது.

மனிதனிடம் அல்லாஹ்வின் இருப்பின் மீதான தவக்குல் மற்றும் நம்பிக்கை எனும் பண்பு உருவாக வேண்டும் என்பதற்காக அவன், இறைவன் திருப்தியடைவதில் (தான்) திருப்தியடைதலின் உண்மைத்துவத்தை அறிந்து, ஈடேற்றத்தின் அசல் நோக்கமாகவும் குறிக்கோளாகவும் இருக்கக்கூடிய ஓர் உண்மையான மனநிறைவையும் மனநிம்மதியையும் பெற வேண்டும் என்பதற்காகவும் (திருக்குர்ஆன்) இறை நியதிக்குக் கீழ் இருக்குமாறு மனிதனுக்குப் போதிக்கிறது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 223- 224, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு, கூறினார்கள்: அல்லாஹ் உண்மையான ஞானங்களின் தலையூற்றை பிறப்பிடத்தைத் திருக்குர்ஆனில் இந்த சமுதாயத்திற்கு வழங்கினான். எவர் உண்மையான தக்வாவின் மூலமாகவும், இறைவனுக்கு அஞ்சுதல் மூலமாகவும் மட்டுமே கிடைக்கப் பெறுகின்ற திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள இந்த உண்மைகளையும் இறைஞானங்களையும் பெற்று விடுகிறாரோ அவருக்கு எத்தகைய ஞானம் கிடைக்கப் பெறுகிறது என்றால் அது அவரை இஸ்ரவேலர்களின் நபிமார்களுக்கு ஒப்பானவராக ஆக்கி விடுகிறது.

ஆயினும், ஒருவருக்கு வழங்கப் பெற்ற ஆயுதத்தைக் கொண்டு அவர் அல்லாஹ்வின் வழியில் செயலாற்றவில்லை என்றால் அது அவரது தவறுதானே அன்றி அந்த ஆயுதத்தின் தவறு அல்ல என்பது முற்றிலும் உண்மையான விஷயமாகும்.

இப்போது உலகத்தின் நிலை இதுவாகவே ஆகிக் கொண்டிருக்கின்றது. முஸ்லிம்கள் ஒவ்வொரு தீமைகளிலிருந்தும் ஒவ்வோர் இருளிலிருந்தும் தமக்கு ஈடேற்றம் அளிக்கக்கூடிய தம்மை வெளிக் கொணரக்கூடிய திருக்குர்ஆனைப் போன்ற நிகரற்ற அருட்கொடை தங்களிடம் இருந்தும், அதைக் கைவிட்டு விட்டார்கள். அதன் தூய போதனைகளை சிறிதும் பொருட்படுத்தவில்லை. விளைவு அவர்கள் இஸ்லாத்தை விட்டும் வெகு தொலைவில் சென்று கிடக்கின்றார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 349, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதுபோன்று முஸ்லிம்கள் திருக்குர்ஆனின் மகத்துவ மிக்க போதனையை விட்டும் விலகிச் சென்று பெயருக்கு முஸ்லிம்களாக இருக்கின்றனர். சமூக வலைதளங்களில் சின்னச் சின்ன நிகழ்ச்சிகள் அல்லது கிளிப்களை காட்டிக் கொண்டு இருக்கின்றனர். அதில் அவர்கள் மக்களிடம் இன்டர்வியூ எடுக்கின்றனர். அதிலிருந்து அவர்களுக்கு இஸ்லாத்தின் அடிப்படை போதனை மற்றும் வரலாறே தெரியவில்லை என்பது தெரிய வருகிறது.

ஆக, மவ்லவி கூறுவதன் அடிப்படையில் தாதுத்துவத்தின் கண்ணியம் (காத்தல்) அல்லது திருக்குர்ஆன் அல்லது ஸஹாபிகளின் பெயரில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக முழக்கம் இடுவதற்கும் இழப்பு ஏற்படுத்துவதற்கும் முயற்சி செய்கின்றார்கள்.

பங்களாதேஷில் இருந்து ஒருவர் எனக்கு இவ்வாறு எழுதினார்: ஊர்வலம் வந்தபோது அவர்கள் தாக்குதல் தொடுத்தபோது, அநேகமாக ஓர் இளைஞன் கல் எறிந்து கொண்டிருந்தான். அவனிடம் நம் அஹ்மதிகள் சிலர், நீ இது என்ன செய்து கொண்டிருக்கின்றாய்? இது திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளதா? இது இஸ்லாத்தின் போதனையா? எங்கே இருக்கிறது என்று சொல்? நாங்களோ கலிமா கூறக்கூடியவர்கள் ஆவோம் என்று கூறினர். அவன் உடனடியாக அங்கேயே கல்லைக் கீழே போட்டுவிட்டான். ஆக, அவர்கள் மவ்லவி தூண்டிவிடுவதற்கு ஏற்ப செயலாற்ற ஆரம்பித்து விடுகின்றனர்.

அல்லாஹ் இந்தத் தீயவர்களின் தீங்கிலிருந்து நம்மை பாதுகாத்து வைப்பானாக! நாம் இந்த ரமலானிலும், பின்னரும் கூட திருக்குர்ஆனைப் புரியக்கூடியவர்களாகவும் கற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும், அதன்படி அமல் செய்யக்கூடியவர்களாகவும் ஆகுவதற்கு நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! அல்லாஹ் நம்மை உலகின் அசுத்தங்களில் இருந்து பாதுகாத்து வைப்பானாக!

ரமலானில் துஆக்கள் செய்வதன் பக்கமும் சிறப்பான கவனம் செலுத்துங்கள். (இதை) நான் முன்னரும் கூறினேன். அல்லாஹ் எல்லா இடத்திலும் அஹ்மதிகளை, எல்லாத் தீங்கில் இருந்தும் காப்பாற்றுவானாக! எவர்கள் அல்லாஹ்வின் பார்வையில் சீர்திருந்த தகுதியற்றவர்களோ அவர்களைப் படிப்பினைக்குரிய அடையாளமாக ஆக்குவானாக! இவ்வாறு மற்ற மக்கள் அல்லாஹ்வின் கட்டளைகள்படி அமல் செய்யக்கூடியவர்களாக ஆவார்களாக! உலகிற்காக பொதுவாகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் போர் எனும் பேராபத்திலிருந்து உலகைக் காப்பாற்றுவானாக.

இப்பொழுது நான் சில மர்ஹூம்களைப் பற்றி கூற விரும்புகிறேன். அவர்களில் எல்லாருக்கும் முதலாவதாக நமது இயக்கத்தின் முரப்பி மற்றும் இயக்கத்தின் முபல்லிஃக் ஒருவர் ஆவார்கள். இவர்கள் தமது வக்ஃபை மிகவும் நன்றி உணர்வுடன் நிறைவேற்றி வந்தார்கள். மிகவும் எளிமையான மனிதராக இருந்தார்கள். அவர்களுக்கு மிக நீண்ட காலம் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. மேலும், இவர்கள் தொண்டிற்கான உரிமையை நிறைவேற்றினார்கள். அன்னாரின் பெயர் முனவ்வர் அஹ்மத் குர்ஷித் ஸாஹிப் ஆகும். மேற்கு ஆஃப்ரிக்காவில் இயக்கத்தின் முபல்லிஃக் ஆக இருந்தார்கள். அன்னார் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் அன்னாரின் தந்தை வழிப்பாட்டனாரான ஹஸ்ரத் மியான் அப்துல் கரீம் ஸாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. அன்னார் 1903 ஆம் ஆண்டு வந்தது. அன்னார் 1903 ஆம் ஆண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கரம்தீன் வழக்கில் ஜஹல்லம் (எனும் இடத்திற்கு) சென்றிருந்தபோது பைஅத் செய்தார்கள். மவ்லவி குர்ஷீத் ஸாஹிப் அவர்களின் பெற்றோருக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகள் எல்லாம் நோய்வாய்ப்பட்டு இறந்து வந்தன. அன்னாரும் பிறக்கும்போது நோய்வாய்ப்பட்டார்கள். எந்த வழியும் தென்படவில்லை எனும்போது ஸஹாபியாக இருந்த அன்னாரின் தந்தை வழிப்பாட்டனார் மியான் அப்துல் கரீம் ஸாஹிப் அவர்கள் இந்தக் குழந்தையை இறைவழியில் வக்ஃப் செய்து விட முடிவு செய்தார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறைவனுக்குத் தேவை என்றால் அவனே காப்பாற்றி விடுவான் என்பதற்காக (வக்ஃப் செய்தார்கள்).

எவ்வாறு இருப்பினும், இதற்கிடையில் ஒரு தொலை தூர கிராமத்தில் வசிக்கக்கூடிய ஒரு மருத்துவர் அந்த கிராமத்துக்கு வந்தார். அவர் சிகிச்சை அளித்தார். அல்லாஹ் அற்புதமான முறையில் அன்னாரை குணப்படுத்தினான். அன்னாரின் மாமனாரான முஹம்மது கான் தர்வேஷ் ஸாஹிப் அவர்களும் அன்னாரைப் பற்றி கனவு கண்டார்கள். அன்னார் மிக உயரமான, ஒளிமயமான ஒரு மினாராவில் இருக்கிறார்கள்.

அன்னார் அஹ்மதிய்யத்தின் மினாராவை மிகவும் பிரகாசிக்கச் செய்வார்கள் என்றும் அஹ்மதிய்யத்திற்கு அதிகமாக சேவை செய்யும் நற்பாக்கியம் பெறுவார்கள் என்றும் அந்த தர்வேஷ் ஸாஹிப் அவர்களிடம் சொல்லப்பட்டது. அல்லாஹ் அன்னாருக்கு நற்பேறு வழங்கினான்.

ஜாமிஆவில் இருந்து தேர்ச்சி பெற்ற பிறகு, சிறிது காலம் பாகிஸ்தானில் இருந்தார்கள். பிறகு, அன்னார் 1983 -ல் ஆஃப்ரிக்கா சென்று விட்டார்கள். கேம்பியாவிலும் செனிகால் போன்ற இடங்களிலும் அன்னார் நீண்ட காலம் தொண்டாற்றியுள்ளார்கள். செனிகாலிலும், கேம்பியாவிலும் அமீராகத் தொண்டாற்றும் நற்பேறும் அன்னாருக்கு கிடைத்தது. பிறகு, நோயின் காரணமாக 2005 இல் இங்கு யூ.கேவிற்கு வந்துவிட்டார்கள். ஆனால், முறையாக செனிகாலுக்கு ஒரு முரப்பி சென்றுவிடாத வரை முறைப்படி அமைப்பு நிலைபெறாத வரை அன்னார் இங்கிருந்தே செனிகால் ஜமாஅத்தின் அமைப்பை இயக்கி வந்தார்கள்.

பின்னர், அன்னார் இந்தக் காலகட்டத்தில் 2008 இல் இருந்து 2012 வரை யூ.கே ஜாமிஆவில் ஆசிரியராகவும் தொண்டாற்றும் நற்பேறு பெற்று வந்துள்ளார்கள். அன்னாருக்கு சந்தர்ப்பம் கிடைத்த இடங்களில் எல்லாம் அன்னார் மிக சிறப்பாகப் பணியாற்றினார்கள். அன்னாருக்கு பல பைஅத்துகள் செய்ய வைப்பதற்கான நற்பேறும் கிடைத்தது. 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்னார் மூலம் அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள்.

இந்த வெற்றியில், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவில் அன்னாருக்கு ஃபாத்திஹே செனிகால் - செனிகாலை வென்றவர் எனும் பட்டத்தையும் வழங்கி கண்ணியப்படுத்தினார்கள். ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் ஏறத்தாழ 15 சட்டசபை உறுப்பினர்களை அன்னார் அழைத்து வந்தார்கள். முரப்பிமார்களுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள பல விருதுகளில் அன்னாருக்கும் அப்துர் ரஹீம் நய்யர் ஸாஹிப் விருது கிடைத்தது.

நான் கூறியதற்கு இணங்க அன்னார் ஸ்பெய்னிற்கும் சென்று வந்தார்கள். அங்கு குடியிருக்கக்கூடிய ஆஃப்ரிக்க மக்களுக்குத் தப்லீக் செய்து வந்தார்கள். மிகவும் நன்றாகப் பணியாற்றினார்கள். அங்கு அதிக பைஅத்துகள் நிகழ்ந்துள்ளன. பிரிட்டன் அன்ஸாருல்லாஹ் அமைப்பின் கீழ் ஆன்லைன் தஃலீமுல் குர்ஆன் வகுப்பும் நடத்தி வந்தார்கள். இந்தப் பணி மரணம் வரை தொடர்ந்தது. அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில் துணைவியார், மூன்று மகன்கள் மற்றும் மூன்று மகள்கள் உள்ளனர். அன்னாரின் ஒரு மகன் இங்கே யூகேவிலேயே இயக்கத்தின் முரப்பியாக இருக்கின்றார்கள்.

அன்னார் கேம்பியா சென்றபோது தற்போது கனடா ஜாமிஆவின் தலைமை ஆசிரியராக இருக்கும் தாவூத் ஹனீஃப் ஸாஹிப் அவர்களும் ஆஃப்ரிக்காவிலுள்ள கேம்பியாவில் ஜமாஅத்தின் அமீராக இருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: 1983-லிருந்து 1994 வரை அன்னாருடன் தொண்டாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்னார் முபல்லிஃக்காக இருந்ததுடன் சேர்த்து பள்ளிக்கூடத்தில் இஸ்லாமியக் கல்வியும் பயிற்றுவித்து வந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: செனிகாலில் தப்லீஃக் நிலைமைகள் எவ்வாறு இருந்தன என்றால், அங்கு எளிதாக (தப்லீஃக்) செய்ய முடியாது. மிக கஷ்டமான சூழ்நிலை இருந்தது. அன்னார்

கூறுகின்றார்கள்:

செனிகாலின் எல்லையில் அமைந்துள்ள ஃப்ராஃபீனீ எனும் சிற்றூருக்கு அன்னார் 1985 இன் இறுதியில் அன்னார் பணி மாற்றம் செய்யப்பட்டார்கள். இங்கு இருந்து கொண்டு செனிகாலில் அஹ்மதிய்யத்தை நிலைநாட்டுவதற்கான திட்டத்தில் வெற்றி காண்பது நோக்கமாக இருந்தது. மிகவும் கஷ்டமான வேலையாக இருந்தது. செனிகாலின் அரசாங்கம் எந்த ஒரு பாகிஸ்தானிக்கும் வீஸா வழங்கி வந்ததில்லை. ஆனால், மவ்லவி முனவ்வர் குர்ஷீத் ஸாஹிப் அவர்களிடம் மக்களுடன் நன்றாக கலந்துவிடும் திறமை இருந்தது. மேலும், நல்ல முறையில் தொடர்புகள் ஏற்படுத்தி வந்தார்கள்.

பின்னர், அன்னார் பிரெஞ்சு மொழியும் ஓரளவு அறிந்திருந்தார்கள். எனவே அன்னார் அங்கு நியமிக்கப்பட்டபோது அன்னார் விரைவில் அங்கு எல்லையில் அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தினார்கள். பின்னர், இந்தத் தொடர்புகள் காரணமாக செனிகாலுக்கு வந்து செல்ல ஆரம்பித்தார்கள். பின்னர் அங்கு ஒரு Primary பள்ளியின் தலைமை ஆசிரியர் மூலமாக அன்னார் மேற்கொண்டு பிரெஞ்சுமொழிக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார்கள். ஏனெனில், அன்னார் தாம் இங்கு தலைமை ஆசிரியர் அப்துஸ் ஸலாம் பாரீ ஸாஹிப் அவர்களுடன் அமர்ந்து பிரெஞ்சு கற்றுக் கொள்ளலாம் என்று அங்கிருந்த உள்ளூர் அதிகாரிகளிடம் அனுமதி வாங்கியிருந்தார்கள். எவ்வாறு இருப்பினும், இது வெற்றியாக இருந்தது. இவ்வாறு அன்னார் அவ்வப்போது செனிகாலுக்கு சென்று வந்தார்கள்.

பின்னர், ஒரு வகையான சிறப்பான Pass அன்னாருக்கு கிடைத்துவிட்டது. அதன் அடிப்படையில் கேம்பியாவின் வாகனங்களில் செனிகால் சென்று வர முடிந்தது. அதில் அன்னார் பிரசுரங்களை எடுத்துச் செல்வார்கள். அங்கு தப்லீஃக் செய்வார்கள்.

அதன் மூலம் அன்னார் பல பைஅத்துகளை செய்ய வைத்துள்ளார்கள். காலிக் மண்டலத்தில் ஏற்கனவே பல அஹ்மதிகள் இருந்தார்கள். அங்கு ஹாமித் அம்பயீ ஸாஹிப் எனும் உள்ளூர் முபல்லிஃக் ஒருவர் இருந்தார்கள். அவர் அன்னாருடன் இணைந்து பணியாற்றினார்கள். மேலும், மேற்கொண்டு அங்கு ஜமாஅத்துகள் பரவின. அங்கு செல்வதற்கு முபல்லிஃக்மார்களுக்கு சாலைகளே இருக்கவில்லை. ஆஃப்ரிக்காவில் உடைந்த சாலைகள் அல்லது மண் சாலைகள் இருக்கும். மற்ற சில இடங்களில் சாலைகளே இருக்கவில்லை.

ஆனால், அன்னார் நீண்ட தூர பகுதிகளுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றடைந்து விடுவார்கள். மேலும், மோட்டார் சைக்கிளின் பாதையும் எப்படி இருந்தது என்றால், முற்கள் உள்ள புதர்கள் எந்த அளவு அருகில் வந்திருக்கும் என்றால் அன்னாருடைய கால்களில் இரத்தம் வந்துவிடும். ஆனால், அன்னார் ஒருபோதும் அதைப் பொருட்படுத்தியதில்லை. தமது பணியில் மூழ்கி இருந்து வந்தார்கள்.

பிறகு, தாவூத் ஹனீஃப் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: ஆரம்பத்திலோ இது மிகவும் சிரமமான பணியாக இருந்தது. மிகவும் எச்சரிக்கையுடன் நாங்கள் தப்லீஃக் செய்து வந்தோம். பின்னர், மெது மெதுவாக தொடர்புகள் உருவான பிறகு ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்பட்டுவிட்ட பிறகு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாத்தை உயிர்ப்பிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளார்கள் போன்ற விஷயங்களை மக்களுக்குக் கொண்டு சேர்க்கத் தொடங்கி விட்டார்கள். அதிகாரிகளுக்கும் இந்தத் தூதுச் செய்தி சென்றடைய ஆரம்பித்ததும், அன்னார் மிகவும் சுதந்திரமாக செனிகாலுக்கு வந்து செல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

முறையாக சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு வந்தார்கள். பின்னர் இதேபோன்று காலிக் மண்டலத்தில் பெரும்பாலான பகுதிகளில் ஜமாஅத் நிறுவப்பட்டு விட்டது. பல ஜமாஅத்துகள் உருவாகிவிட்டன. அது அதிகரிக்கவும் ஆரம்பித்துவிட்டது. மோட்டார் சைக்கிளைப் பற்றி நான் கூறியிருந்தேன். எப்படிப்பட்ட சில இடங்களும் இருந்தன என்றால், அங்கு மோட்டார் சைக்கிள் கூட ஏதும் இருக்கவில்லை. எனவே அன்னார் மாட்டு வண்டிகளிலும் கழுதை வண்டிகளிலும் அமர்ந்து மிக நீண்ட பயணங்கள் செய்தார்கள். பல்வேறு கிராமங்களுக்கு சென்றடைந்தார்கள்.

இன்னும் சொல்வதாயின், தற்போதைய சில முபல்லிஃக்மார்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: இப்பொழுது நாங்கள் அங்கு சென்றபோது அங்குள்ள மக்கள் கூறினார்கள்: வெகு காலம் முன்னர் மவ்லானா முனவ்வர் குர்ஷீத் ஸாஹிப் அவர்கள் எங்களிடம் வந்து கொண்டிருந்தார்கள். மிகவும் கஷ்டமான நிலைமைகளில் வந்து கொண்டிருந்தார்கள். அன்னார் அங்கு சென்று தங்கி வந்தார்கள். தப்லீஃக் செய்து வந்தார்கள். இரவுகளையும் அங்குள்ள மக்களுடன் கழிப்பார்கள்.

அன்னாரின் உணவும் என்னவாக இருந்தது என்றால், வேகவைத்த செர்ரீயை அல்லது மக்காச்சோளத்தை வேகவைத்து தண்ணீருடன் சாப்பிட்டு விடுவார்கள். இதுவே, அன்னாரின் உணவாக இருந்தது. பின்னர், தப்லீஃக் செய்து கொண்டே முன்னேறிச் சென்றுவிடுவார்கள். தங்குவதற்கு நல்ல இடம் இருக்கிறதா? இல்லையா? உணவு கிடைக்கிறதா? இல்லையா? என்பதை ஒருபோதும் அன்னார் பொருட்படுத்தியதில்லை. எங்கு எந்த இடம் கிடைத்ததோ அங்கு தங்கிவிடுவார்கள். எது உண்ண கிடைத்ததோ அதை சாப்பிட்டு வந்தார்கள். இவ்வாறு அன்னார் எல்லா மக்களுக்கும் பிரியமானவராக ஆகிவிட்டார்கள்.

தப்லீஃக்கையும் மிகச் சிறப்பாக செய்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் பிரெஞ்சு மொழி பேசும் நாடுகளில் ஜமாஅத் வளர்வதாகக் கனவே கண்டார்கள். அப்போது அன்னார் இருந்த பகுதியை விட்டு வெளியேறி செனிகால் பக்கமும் அன்னார் கவனம் செலுத்தினார்கள். அன்னார் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அங்கு மக்களுக்குத் தாக்கம் ஏற்படுத்தும் வகையில் தப்லீஃக் செய்தார்கள்.

பின்னர் இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தப்லீஃக் செய்தார்கள். மேலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் பதினான்கு பேருக்குப் பைஅத் செய்யும் நற்பேறு கிடைத்தது. ஜமாஅத் மீது இதன் தாக்கமும் நன்றாக இருந்தது. பிறகு, அங்கும் ஜமாஅத்துகள் உறுதியாக தொடங்கின. ஜமாஅத் அமைப்பை வலுப்படுத்துவதற்காக முஅல்லிம்மார்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் மார்க்கக் கல்வி, தர்பிய்யத் மற்றும் பயிற்சியின் தேவை இருந்தது.

ஆண்டு வாரியாக இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்தினார்கள். மவ்லானா ஸாஹிப் அவர்கள் மிகுந்த துணிச்சலுடன் இந்தப் பணியையும் நிறைவேற்றினார்கள். 1997 -இல் அன்னார் செனிகாலின் அமீராக நியமிக்கப்பட்டார்கள். இறுதிநேரம் வரை மிகக் கடினமாக உழைத்து அன்னார் தமது தொண்டை நிறைவேற்றினார்கள். (தாவூத் ஹனீஃப் ஸாஹிப்) எழுதியுள்ளார்கள்.

காலத்தின் கலீஃபாவிற்கு கீழ்ப்படியும் உணர்வு அன்னாரிடம் மிகுதியாக நிறைந்திருந்தது.

உண்மையிலேயே நானும் இதைத் தான் கண்டேன்.

அன்னார் நோய்வாய்ப்பட்டு இங்கு வந்திருந்த சமயத்திலும் -பத்து வருடங்களாக மிகவும் நோய்வாய்ப்பட்டு இருந்தார்கள். நோயுற்ற தருணத்திலும் - அன்னாருக்கு எப்போது ஏதாவது ஒரு பணி கொடுக்கப்பட்டாலும் உடனடியாக அதை நிறைவேற்ற முயற்சி செய்வார்கள்.

தப்லீஃகில் மிகவும் ஆர்வம் இருந்தது. செனிகாலில் முபல்லிஃக் வஜிவுல்லாஹ் ஸாஹிப் உள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நான் இங்கு வந்தபோது முனவ்வர் ஸாஹிப் அவர்களின் பெயரை அதிகமாக கேள்விப்பட்டேன். எங்கு சென்றாலும் மக்கள் மிகவும் அன்புடன் அன்னாரைப் பற்றியே கூறிவந்தார்கள்.

உள்ளூர் முஅல்லிம்கள் சம்பவங்களை எடுத்துரைக்கின்றார்கள். உள்ளூர் முஅல்லிம் கீமூதோ மாரா ஸாஹிப் கூறுகின்றார்கள்: முனவ்வர் குர்ஷீத் ஸாஹிப் அவர்கள் மூலமாக நான் அஹ்மதிய்யத்தை ஏற்றேன். அன்னார் எனக்கு நன்றாக படிப்பித்தார்கள். மேலும், மிகவும் கடினமாக உழைத்தும் அன்புடனும் எனக்குத் தர்பிய்யத் வழங்கினார்கள். அதன் விளைவாக நான் ஜாமிஆ அஹ்மதிய்யா கானாவிலிருந்து கல்வி பயின்றேன். பின்னர், ஜமாஅத்திற்கு தொண்டாற்றும்

தவ்ஃபீக் கிடைத்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் மிக நீண்ட காலத்தை அன்னாருடன் கழித்தேன். அன்னார் செனிகாலியன் ஆவார்கள். அன்னார் எழுதுகின்றார்கள்: கிலாஃபத்துடன் அளவு கடந்த நேசமும், அன்பும் இருந்தது.

கூறுகின்றார்கள்: மேலும், இந்த விஷயங்களையே என்னிடமும் கூறிவந்தார்கள். கிலாஃபத்துடன் தொடர்பு வைத்திருங்கள் என்று குறிப்பிட்டு கூறிவந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: அன்னாரிடம் நான் பார்த்த இரண்டாவது விஷயம், ஒருபோதும் அன்னார் தஹஜ்ஜுத்தை விட்டதில்லை. தஹஜ்ஜுத் தொழுங்கள்; தஹஜ்ஜுத்தில் குறிப்பாக கலீஃபத்துல் மஸீஹ்காக துஆ செய்து வாருங்கள் என்று எங்களுக்கும் வலியுறுத்திக் கூறிவந்தார்கள்.

இந்த முஅல்லிம் ஸாஹிப் அவர்களே (மேற்கொண்டு) எழுதுகிறார்கள்: மிகவும் இறையச்சம் உடைய மனிதராக இருந்தார்கள். மிகவும் கடினமாக உழைக்கக்கூடியவராக இருந்துள்ளார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று முஹம்மதிய்ய மஸீஹின் தூதுச் செய்தியை எட்ட வைத்துவிட்டு வர வேண்டும் என்ற முயற்சியே எப்பொழுதும் இருந்தது.

அன்னார் கூறுகின்றார்: முனவ்வர் ஸாஹிப் ஜமாஅத் பணிகளில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களுக்கு இரவு, பகல் மற்றும் உண்ணுதல், பருகுதல் ஆகியவை பற்றி எந்தக் கவலையும் இருந்ததில்லை என்பதற்கு இந்த எளியவன் சாட்சியாவேன். இறைவனுடன் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது. அதிக ஆன்மிகக் காட்சிகளை கண்டு வந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்: ஒருமுறை ஜமாஅத் நிகழ்ச்சி ஒன்று இருந்தது. அங்கு மக்கள் வந்திருந்தார்கள். அங்கு ஓர் அஹ்மதி நோய்வாய்ப்பட்டு போனார். அவர் திரும்பிச் செல்ல நினைத்தார். அன்னார் அவருக்கு அனுமதி அளித்துவிட்டார்கள்தான்: ஆயினும் அவர் பேருந்தில் இடம் கிடைத்து பேருந்தில் அமரச் சென்றபோது முனவ்வர் ஸாஹிப் அவரைத் தடுத்து விட்டார்கள். இதில் அமர வேண்டாம். வேறொரு பேருந்தில் அமருங்கள் என்றார்கள்.

அன்னார் கூறுகின்றார்: எனக்கு அப்பொழுது இந்தப் பேருந்து விபத்துக்கு உள்ளாக நேரிடலாம் என்ற எண்ணம் வந்தது. ஒருவேளை அவ்வாறு நிகழ்ந்தால் மக்கள், பாருங்கள்! இவர் ஜமாஅத் நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தார். அங்கு அவர் விபத்தின் காரணமாக இறந்துவிட்டார் என்று கூறுவார்கள்.

ஆனால் எவ்வாறு இருப்பினும், அதுவே நடந்தது. எந்தப் பேருந்தில் (அமர வேண்டாம் என்று) தடுத்தார்களோ அது விபத்திற்குள்ளானது. வேறு பேருந்தில் அமர்ந்தார்கள். அந்த மனிதர் நலமாக வீடு சென்று சேர்ந்துவிட்டார். இதனாலும் மக்களின் ஈமான் மிகவும் அதிகரித்தது. மேலும் மக்கள் மத்தியில் அங்கு அன்பின் நிலை எவ்வாறு இருக்கிறது என்றால், செனிகாலில் பல்வேறு இடங்களில் அன்னாரின் ஜனாஸா காயிப் தொழுகை தொழப்பட்டது. அஹ்மதி அல்லாதவர்களும் அதில் அதிகமாக கலந்து கொண்டார்கள்.

பின்னர், ஃபாட்டகின் ஜமாஅத் சத்ர் ரோகன் ஃபாயீ ஸாஹிப் கூறுகின்றார்கள்: எந்த அளவுக்குத் தம்மை மாய்த்துக் கொண்டு முனவ்வர் குர்ஷீத் ஸாஹிப் அவர்கள் பணியாற்றினார்களோ அவ்வாறு செய்வது மற்றவர்களுக்கு மிகவும் கடினமாகும்.

பின்னர், உள்ளூர் முஅல்லிம் ஜியாலூ ஸாஹிப் கூறுகின்றார்கள்: முதல்முறை நான் செனிகால் வந்தபோது ஒரு நீண்ட காலம் முனவ்வர் ஸாஹிபுடன் பணியாற்றும் நற்பேறு கிடைத்தது. மிகவும் இறையச்சம் உடையவராகவும் வீரத்திற்கு சொந்தக்காரராகவும் இருந்தார்கள். ஜமாஅத்தின் சுற்றுப்பயணங்களின் போது மிகவும் ஹிக்மத்துடனும் வீரத்துடனும் தப்லீஃக் பணிகளை நிறைவேற்றி வந்தார்கள். இவ்வாறே நியாயத்தை விரும்பக்கூடியவராக இருந்தார்கள். ஜமாஅத்துடன் மிகவும் அன்புடனும், நியாயமாகவும் நடந்து கொண்டார்கள்.

ராஜா புர்ஹான் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் இறுதி காலங்களில் நோய்வாய்ப்பட்டிருந்த தருணத்தில் அன்னாருக்கு தினமும் டயாலிஸிஸ் (Dialysis) செய்யப்பட்டு வந்தது. ஒருநாள் ஒரு திருமணத்தில் சந்தித்தபோது நான் கடை திறந்து உள்ளேன் என்று கூறினார்கள். அதற்கு நான் கடை திறந்துள்ளீர்களோ எதற்காக என்று கேட்டேன்.

அன்னார் கூறினார்கள்: நான் வீட்டில்தான் இருக்கின்றேன். எனவே நான் வீட்டிற்கு வெளியில் ஒரு மேசையைப் போட்டுக் கொண்டேன். வெயில் காலங்களில் அங்கு தண்ணீர் வைத்துக் கொள்வேன். பிரசுரங்களையும் வைத்துக் கொள்வேன். வழிப்போக்கர்களுக்குத் தண்ணீர் தேவைப்படும்போது அவர்களுக்குத் தண்ணீர் அருந்தக் கொடுப்பேன். பிரசுரத்தையும் கொடுத்து விடுவேன்.

இவ்வாறு இந்த நோய் தருணத்திலும் கூட அன்னார் வெறுமனே அமராமல் புதிய வழிமுறையைத் தேடிக் கொண்டார்கள். ஆகையால், தப்லீஃக் எவ்வாறு செய்வது? என்று கேட்கக்கூடிய மக்கள் தப்லீஃக் செய்வதற்கான வழிகளைத் தேடினால் கிடைத்து விடுகின்றன. உத்வேகம் மட்டும் இருக்க வேண்டும். ஆர்வம் இருக்க வேண்டும்.

பிறகு, முனவ்வர் குர்ஷீத் ஸாஹிப் அவர்கள் மொழிகளை விரைவில் கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு திறமையையும் கொண்டிருந்தார்கள். கேம்பியாவிலும் பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. அன்னார் (அந்த) மொழிகளை அறிந்திருந்தார்கள். அன்னார் இவ்வாறு கூறிவந்தார்கள்:

கேம்பியாவிலிருந்து படித்து சென்ற நம்முடைய மூன்று முபல்லிஃக்மார்களான அப்துல்லாஹ் ஸாஹிப், அப்துர் ரஹ்மான் ஸாஹிப் மற்றும் முஹம்மத் முபாயீ ஸாஹிப் ஆகிய இவர்கள் மூவரும் பலதரப்பட்ட கோத்திரங்களைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இவர்களால் ஒருவர் மற்றவர்களின் மொழியைப் புரிந்து கொள்ள இயலாது. ஆனால், நான் இந்த மூன்று கோத்திரங்களின் மொழிகளையும் அறிவேன்.

இவர்களின் துணைவியார் நுஸ்ரத் ஜஹான் ஸாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்: பிள்ளைகளின் தர்பிய்யத்தில் மிகுந்த கவனம் செலுத்தினார்கள். மிக அதிகமாக அன்பு செலுத்தக்கூடியவராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் அளவற்ற அன்பு இருந்தது. வக்ஃபின் உரிமையை செலுத்தினார்கள். கருத்து வேறுபாடுகளைக் களைவதற்கும் சமாதானத்தை ஏற்படுத்தவும் இயன்ற அளவு முயற்சி செய்வார்கள். விருந்தோம்பல் பண்பு அதிகமாக இருந்தது. ஆஃப்ரிக்காவில் சுற்றுப் பயணத்திற்கு செல்லும்போது எங்களிடம், நான் எப்பொழுது வருவேன் என்று கவலை கொள்ளாதீர்கள். வேலை முடிந்தவுடன் நான் வீடு திரும்பி விடுவேன் என்று கூறிவிடுவார்கள்.

துணைவியார் கூறுகின்றார்கள்: தப்லீஃகிற்கான பித்து இருந்தது. அன்னாருக்கு ஸ்பெயினிலும் தப்லீஃக்கான அதிக சந்தர்ப்பம் கிடைத்தது. நோய்வாய்ப்பட்டு இருந்தும் அங்கு சென்று வந்தார்கள். இவ்வாறு பழைய தொடர்புகளை அன்னார் புதுப்பித்து வந்தார்கள். அன்னாரின் மகன் முஹம்மத் அஹ்மத் குர்ஷீத் முரப்பி ஆவார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: மக்களுக்குப் பயன்பட வேண்டும். ஏனெனில், இதுவும் ஓர் அழகான இறை வணக்கமாகும். இறைவன் இதனால் திருப்தி அடைகின்றான் என்று எங்களுக்கு எப்பொழுதும் அறிவுரை கூறிவந்தார்கள். மகன் கூறுகின்றார்: தந்தையாரிடம் இஸ்லாமிய போதனைகளின் ஒரு செயல் முன்மாதிரியை எப்போதும் நாங்கள் கண்டு வந்தோம்.

ஸ்பெயினிலிருந்து ஸல்மான் ஸாஹிப் கூறுகின்றார்கள்: ஸ்பெயினில் இருந்த காலகட்டத்தில் பலமுறை அன்னாருடன் தப்லீஃகிற்காக செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. மீண்டும் மீண்டும் பார்த்த ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், அன்னார் யாராவது ஒரு வழிப்போக்கருக்கு ஸலாம் கூறுவார்கள். அவருக்காக துஆ செய்வார்கள். பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவருடன் நெருங்கிவிடுவார்கள். சிறிதுநேரத்திலேயே அவருடன் ஒரு வலுவான தொடர்பு ஏற்பட்டு விடும்.

அத்துடன் இவர் இன்ன ஊரைச் சேர்ந்தவர் ஆவார். அதன் அக்கம்பக்க பகுதிகள் இவையாகும். அங்கு நான் சென்றுள்ளேன். அந்தப் பகுதி மக்கள் மிகவும் களங்கமற்றத் தன்மை

உடையவர்கள் என்று கூறிக் கொண்டே செல்வார்கள். அங்குள்ள பிரபலமான நபர்களையும் அறிந்திருப்பார்கள். அன்னார் ஆஃப்ரிக்க மொழியில் பேசுவார்கள் என்பதனால், அந்த மனிதரும் அன்னார் கூறுவதைக் கேட்பார். அவருக்கு ஆச்சரியமாகவும் இருக்கும். மகிழ்ச்சியாகவும் இருக்கும். இரண்டு மூன்று சந்தர்ப்பங்களுக்குப் பிறகு அந்த மனிதர் நெருங்கி விடுவார். பிறகு, அவருக்கு ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: முதல்முறை தூதுச்செய்தியை எட்ட வைக்க மாட்டார்கள். முதலில் தனிப்பட்ட தொடர்பை உருவாக்குவார்கள். பின்னர், இரண்டாவது அல்லது மூன்றாவது சந்திப்பில் தப்லீஃக் செய்வார்கள். அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: அதற்குள் அன்னாரது தனிப்பட்ட தொடர்பின் காரணமாகவும் அன்னாரின் நல்லொழுக்கத்தின் காரணமாகவும் நிலம் தயாராகி இருக்கும். பிறகு, மக்கள் உடனடியாக பைஅத்தும் செய்து விடுவார்கள்.

எவ்வாறு இருப்பினும், அன்னார் ஸ்பெயினில் அதிக பணிகள் செய்துள்ளார்கள். அல்லாஹ்வின் அருளால் அன்னார் அங்கு ஜமாஅத்தையும் நிறுவி விட்டார்கள். அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்ற ஒரு பித்து அவர்களிடம் இருந்தது. அத்துடன் பணிவும் மிக அதிகமாக இருந்தது என்பதும் முற்றிலும் உண்மையான விஷயம் ஆகும்.

ஸ்பெயின் செல்லுமாறு நான் அவர்களிடம் கூறியபோது நோய்வாய்ப்பட்டிருந்தும் எவ்வகையான சாக்கு போக்கும் கூறாமல் ஆயத்தமாகிவிட்டார்கள். அல்லாஹ் ஜமாஅத்திற்குத் தன்னலமற்ற பணியாற்றக்கூடிய பணிகளை நிறைவேற்றக்கூடிய இப்படிப்பட்ட நன்றி உணர்வுள்ள முபல்லிஃக்மார்களையும், முரப்பிமார்களையும் வழங்கிக் கொண்டே இருப்பானாக. அல்லாஹ் அன்னாரின் அந்தஸ்தையும் உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா இயக்கத்தின் முரப்பி இக்பால் அஹ்மத் முனீர் ஸாஹிப் அவர்களுடையது ஆகும். அன்னார் சவுத்ரி முனீர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகனாவார்கள். அன்னார் பாகிஸ்தானில் இருந்தார்கள். அன்னாரும் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

அன்னாரின் குடும்பத்திலும் அஹ்மதிய்யத் அன்னாரின் தந்தை வழிப்பாட்டனாரான சவுத்ரி குலாம் ஹைதர் ஸாஹிப் அவர்கள் மூலம் 1895இல் வந்தது.

அன்னார் 1983 இல் ஜாமிஆவில் கல்வியை முழுமை செய்தார்கள். பிறகு, இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யாவின் கீழ் பணியாற்றினார்கள். பிறகு, 2001 இல் இருந்து 2008 வரை ஸிராலியோனில் இருந்தார்கள். பிறகு திரும்பிச் சென்றார்கள். அதற்கு அடுத்து, பின்னர் பாகிஸ்தானின் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றி வந்தார்கள். இருதய நோயாளியாகவும் இருந்தார்கள். ஆனால், அவ்வாறு இருந்தும் மிகவும் கடினமாக உழைத்து பணியாற்றுபவராக இருந்தார்கள்.

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். மிகவும் கடினமாக உழைக்கக்கூடியவராகவும் கவனத்துடன் தொண்டாற்றுபவராகவும் இருந்தார்கள். மக்களுடன் மிக நல்ல தொடர்பு இருந்தது. களங்கமற்ற இயல்புக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். மர்ஹூம் அவர்களுக்குத் துணைவியார் மற்றும் மூன்று மகன்கள் உள்ளனர்.

இயக்கத்தின் முரப்பி அப்துல் வக்கீல் ஸாஹிப் கூறுகின்றார்கள்: எல்லாருக்கும் பிடித்த நபராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் நல்ல தொடர்பு இருந்தது. மிகவும் கடினமாக உழைக்கக்கூடியவராக இருந்தார்கள். மதிப்பச்சம் கொண்ட மனிதராக இருந்தார்கள். ஆனால், உள்ளத்தால் மிகவும் பரிவுடையவராகவும் இருந்தார்கள். ஓரளவு சந்திப்பிற்குப் பிறகே அன்னாரிடம் உச்ச கட்ட பணிவு இருக்கிறது என்று கணித்து விடுவார்கள்.

கராச்சியின் துணை அமீர் ஸய்யித் முனீர் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடன் அன்னார் பணியாற்றினார்கள்

அன்னார் கூறுகின்றார்கள்: மிகவும் கடினமாக உழைக்கக்கூடியவராகவும் களங்கமற்ற இயல்புக்கு சொந்தக்காரராகவும் இருந்தார்கள். எந்த வேலை கொடுக்கப்பட்டாலும் அதற்கு முன்னுரிமை அளித்து உடனடியாக செய்துவிடுவார்கள். முறையாக அலுவலகத்திற்கு வந்து தமது பெரும் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்குவார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்:

எனக்கும் அவர்களிடம் இருந்து ஊக்கம் கிடைத்து வந்தது. உள்ளத்தால் மிகவும் தூயவராக இருந்தார்கள். வட்டத்தின் மக்களுடன் தனிப்பட்ட தொடர்பு இருந்தது. அதன் காரணமாக அன்னாரின் பணிகளில் அதிகம் எளிமை ஏற்பட்டு வந்தது. இதன் காரணமாகவே சந்தாக்கள் பக்கம் கவனமூட்டுவதற்கும் இவர்களிடமே கூறப்பட்டு வந்தது. பின்னர், அன்னார் கூறுவதன் மூலம் திருப்திகரமான தாக்கம் ஏற்பட்டு வந்தது. அல்லாஹ் மர்ஹூம் அவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி அவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்தை வழங்குவானாக!

மூன்றாவது குறிப்பு காதியானைச் சேர்ந்த தர்வேஷ் மர்ஹூம் அவர்களின் துணைவியார் ஸய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் ஸாஹிபா அவர்களுடையது. கடந்த நாட்களில் அன்னாரும் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

நீண்ட காலமாக படுக்கையில் இருந்தார்கள். அன்னார் தர்வேஷிய காலகட்டத்தில் ஒடிசா மாநிலத்தில் இருந்து திருமணம் ஆகி வந்த முதல் பெண்மணி ஆவார்கள். மர்ஹூமா தம் கணவருடன் தர்வேஷிய காலகட்டத்தைப் பொறுமையுடனும் நன்றியுடனும் கழித்தார்கள். தொழுகை மற்றும் நோன்பை முறையாக பேணக்கூடியவராகவும் துஆக்கள் செய்யக்கூடியவராகவும் நற்பண்பு கொண்ட களங்கமற்ற பெண்மணியாகவும் இருந்தார்கள். முறையாக திலாவத் செய்யக்கூடியவராகவும் மற்றவர்களுக்குத் திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுக்கக்கூடியவராகவும் இருந்தார்கள்.

அன்னார் பல குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்துள்ளார்கள். தர்வேஷிய காலகட்டத்தில் வருமானம் குறைவாக இருந்தபோது மற்றவர்களைப் பார்ப்பதற்குப் பதிலாக தம்முடைய செலவுகளுக்காகக் கோழிகளை வளர்த்து வந்தார்கள். படைப்பினங்களுக்குத் தொண்டாற்றும் உணர்வு வெளிப்படையாக தெரிந்து வந்தது.

காதியானில் பெண்களுக்கான கஃபனிடும் சந்தர்ப்பத்தில் அன்னார் மிகவும் தொண்டாற்றி வந்தார்கள். நீராட்டுதல் போன்றவற்றிலும் உதவி செய்வார்கள். காலத்தின் கலீஃபாவுடன் சிறப்பான தொடர்பு இருந்தது. எல்லாத் திட்டத்திலும் பங்கெடுப்பார்கள். மர்ஹூமா மூஸியாகவும் இருந்தார்கள்.

பின்விட்டுச் சென்றவர்களில் 4 மகன்களும், 1 மகளும் உள்ளனர். அன்னார் குர்ஷீத் அன்வர் ஸாஹிப் அவர்களின் இரண்டாவது தாயாராக இருந்தார்கள். அன்னார் அஹ்மதிய்யத்தின் வரலாற்றை எழுதிய மர்ஹூம் தோஸ்த் முஹம்மத் ஷாஹித் அவர்களின் சிற்றன்னையாகவும் இருந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருக்கு பாவமன்னிப்பு வழங்கி அன்னாரோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்தை உயர்த்துவானாக! தொழுகைக்குப் பிறகு நான் அன்னாரின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன்.

தமிழாக்கம்:
மவ்லவி. அத்தாவுல் முஃக்னீ

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

## ஜுமுஆ பேருரை

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மார்க்கத்தின் சீர்திருத்தத்திற்காக இறைவன் புறமிருந்து தோன்றவிருந்தவர் நானே ஆவேன். பூமியிலிருந்து காணாமல் போன அந்த ஈமானை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவும், இறைவனிடமிருந்து ஆற்றல் பெற்று அவனது கரத்தின் ஈர்ப்புச் சக்தியால் உலகை சீர்திருத்தம், இறையச்சம் மற்றும் உண்மையின் பக்கம் ஈர்ப்பதற்காகவும், அவர்களின் கொள்கை மற்றும் செயல் தவறுகளை அகற்றுவதற்காகவும் நான் தோன்றியுள்ளேன் ( ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

மற்றொரு கூட்டம் உள்ளது. அது இறுதி காலத்தில் வெளிப்படும். அவர்களும் முதலில் இருளிலும், வழிகேட்டிலும் இருப்பார்கள். மேலும் அறிவு, நுட்பமான ஞானம் மற்றும் நம்பிக்கையிலிருந்து வெகு தொலைவில் இருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் ஸஹாபிகளின் வழியில் கொண்டு வருவான்

எந்த நிலையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவரின் காலம் ஒன்றாக உள்ளதோ அதேபோன்று பணியும் ஒன்றே ஆகும். அதாவது ஈமானை மீண்டும் பூமியில் நிலைநாட்டுவது ஆகும். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹே பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆவார் என்பது உறுதியாக நிரூபணம் ஆகின்றது. அவரது ஜமாஅத்திற்கு ஆதரவாக وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ என்ற வசனம் உள்ளது

இரண்டாவது கூட்டம் மேற்கூறப்பட்ட வசனத்திற்கேற்ப ஸஹாபிகளுக்கு ஒப்பான கூட்டம் ஆகும். அந்தக் கூட்டம் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கூட்டம் ஆகும். ஏனெனில், இந்தக் கூட்டமும் ஸஹாபிகளைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களை பார்க்கக் கூடியது ஆகும். மேலும் இருள் மற்றும் வழிகேட்டிற்கு பிறகு நேர்வழிப் பெறக்கூடியக் கூட்டம் ஆகும். மேலும் اٰخَرِيْنَ مِنْهُمْ என்ற வசனத்தில் அந்தக் கூட்டத்தினருக்கு مِنْهُمْ என்ற செல்வத்தில் அதாவது ஸஹாபிகளுடன் ஒப்புமை பெறக்கூடிய அருட்கொடையிலிருந்து பங்கு வழங்கப்பட்டுள்ளது

இறைவன் என்னை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈமானை புதுப்பிப்பதற்காகவும், இறைஞானத்தை வழங்குவதற்காகவும் அனுப்பியுள்ளான். மேலும், அவனது உதவி மற்றும் அருளால் எனது கரத்தில் விண்ணின் அடையாளங்கள் வெளிப்படுகின்றன. மேலும் அவனது நாட்டம் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப (எனது) துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 மார்ச் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **24ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி :**

அவர்கள் இறைவனின் கூட்டத்தினர் ஆவர். அவர்களை இறைவன் சுயமே பாதுகாத்துக் கொண்டிருக்கின்றான். மேலும் அனுதினமும் அவர்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்துகின்றான். மேலும், அவர்களின் இருதயங்களை ஈமானிய ஞானங்களால் நிரப்புகின்றான். மேலும், விண்ணின் அடையாளங்களின் மூலம் ஸஹாபிகளை ஈர்த்ததைப் போன்று அவர்களை தம் பக்கம் ஈர்க்கின்றான். சுருக்கமாக, اٰخَرِيْنَ مِنْهُمْ என்ற சொல்லின் பொருளிலிருந்து வெளிப்படுகின்ற அந்த அனைத்து அடையாளங்களும் இந்த ஜமாஅத்தில் காணப்படுகின்றன.

இறைவனின் கூற்று ஒருநாள் முழுமையடைவது அவசியமானதாக இருந்தது!!!

கூறினார்கள்: اٰخَرِيْنَ مِنْهُمْ என்ற வசனத்தில் இந்த விஷயமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது எவ்வாறு மஸீஹ் மவ்வூத் அவர்களுடைய இந்த ஜமாஅத்திற்கு ஸஹாபிகளின் ஜமாஅத்துடன் ஒப்புமை உள்ளதோ அதேபோன்று எந்த நபர் இந்த ஜமாஅத்திற்கு இமாமாக இருக்கின்றாரோ அவரும் நிழல் ரீதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒப்புமை பெற்றிருக்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே, உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தியின் பண்பாக இந்த விஷயத்தை கூறியுள்ளார்கள். அதாவது, அவர் (இமாம் மஹ்தி) அன்னாருடன் ஒப்புமை பெற்றவராக இருப்பார். மேலும், இரண்டு ஒப்புமைகள் அவரிடம் காணப்படும். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுடனான முதல் ஒப்புமை. அதன் காரணமாக அவர் மஸீஹ் என்று அழைக்கப்படுவார். இரண்டாவது ஒப்புமை என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனானது ஆகும். அதன் காரணமாக அவர் மஹ்தி என்று அழைக்கப்படுவார். இந்த இரகசியத்தின் பக்கம் சுட்டிக் காட்டுவதற்காக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஒருபாகம் இஸ்ரேவலரின் உடல் அமைப்பு மற்றும் நிறமாக இருக்கும். இரண்டாவது பாகம் அரேபியரின் உடல் அமைப்பு மற்றும் நிறம் இருக்கும்.

யுனானிய ஆட்சியாளர்களின் அபாயகரமான தாக்குதலின் சூழ்நிலையில் மூஸவிய மார்க்கம் இருந்தநேரத்திலும், தவ்ராத்தின் போதனை, அதன் முன்னறிவிப்புகள் மற்றும் அற்புதங்களின் மீது கடுமையான தாக்குதல் செய்யப்பட்டுவந்த காலத்திலும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றினார்கள். மேலும், அந்தநேரத்தில் யூனானிய சிந்தனைகளுக்கு ஏற்ப இறைவனின் இருப்பு படைப்பினங்களுடன் கலந்துவிட்ட ஒரு இருப்பாகவும், இறைவன் நோக்கத்துடன் திட்டமிடக்கூடியவன் இல்லை என்றும் கருதப்பட்டிருந்தது. அதாவது, இறைவன் என்பவன் சாதாரண படைப்பினங்களைப் போன்றவன் ஆவான். அவன் அனைத்து வல்லமைகளுக்கும் எஜமானன் அல்லன். அவன் விரும்பியதை செய்யக்கூடியவன் அல்லன் (நவூதுபில்லாஹ்) என்று கருதப்பட்டு வந்தது. மேலும் நபித்துவ தொடருடன் எள்ளி நகையாடப்பட்டு வந்தது. எனவே ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்குப் பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவன் அனுப்பினான். அதன் மூலம் இறைவனின் எண்ணம் இவ்வாறாக இருந்தது. அதாவது, மூஸவிய நபித்துவத்தின் நற்சான்று மற்றும் அந்த அமைப்பின் உண்மைத்துவத்திற்கு புத்தம் புதிய சாட்சியத்தை உருவாக்குவதும், புதிய உதவிகள் மற்றும் விண்ணின் சாட்சியங்கள் மூலம் மூஸவிய கட்டடத்தை மீண்டும் செப்பனிட வேண்டும் என்பதே இறைவனின் எண்ணமாக இருந்தது. அதேபோன்று, இந்த சமுதாயத்திற்காக பதினாங்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் எவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பப்பட்டாரோ அவரின் வருகையின் பொருளும் இதுவாகவே இருந்தது. அதாவது, ஐரோப்பிய தத்துவம் மற்றும் ஐரோப்பிய தஜ்ஜாலிய்யத் பல வகையான தாக்குதல்களை நடத்தியிருந்தன. மேலும் இஸ்லாத்தின் ஒளிகள் மிக மோசமான ஏளனப் பார்வையுடன் பார்க்கப்பட்டது. இந்த அனைத்து தாக்குதல்களையும் அழித்தொழித்து விட வேண்டும். மேலும் முஹம்மதிய்ய நபித்துவத்தை புத்தம் புதிய ஒப்புதல் மற்றும் உதவிகளால் உண்மையை தேடுபவருக்கு ஒளிவீசச் செய்ய வேண்டும் என்பதாகும். ( அன்னார் (ஸல்) மீது ஆயிரமாயிரம் ஸலாம் உண்டாகட்டுமாக) இதுவே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் நோக்கமாக உள்ளது.

பராஹீனே அஹ்மதிய்யாவில் இன்றிலிருந்து பதினேழு ஆண்டுகளுக்கு முன் ஓர் இல்ஹாம் இது தொடர்பாக இறங்கியது. அந்த இல்ஹாம் லட்சக்கணக்கான மனிதர்களிடம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் அந்த ஃபார்ஸி இல்ஹாம் இதுவாகும் :

பகராம் கே வக்தே து நஸ்தீக் ரஸீது பாயே
முஹம்மதியான் பர்மனாரே புலந்த் தர்
முஹக்கம் இஃப்தாத்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதற்கான விளக்கத்துடன் சுயமே மொழியாக்கம் செய்துள்ளார்கள். அந்த மொழியாக்கம் இதுவாகும். அதாவது, உமது நேரம் நெருங்கிவிட்டது. இப்போது வெளிப்படு மற்றும் புறப்படு. மேலும் தற்போது முஹம்மதியர்கள் கிடங்கிலிருந்து வெளியேற்றப்படுகின்ற அந்த நேரம் வந்து கொண்டிருக்கின்றது. முஹம்மதியர்கள் குழியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். அதாவது முஸ்லிம்கள் (வெளியேற்றப்படுவார்கள்). மேலும், ஒரு உயரமான மற்றும் உறுதிவாய்ந்த மினாராவின் மீது அவர்களின் பாதங்கள் படும். (நூஸூலுல் மஸீஹ் நூலிலிருந்து இல்ஹாமின் மொழியாக்கம், ரூஹானி கஸாயின், தொகுதி 8, பக்கம் 511)

பின்னர் கூறினார்கள்: தூய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) நபிமார்களின் தலைவர். இறைவன் உமது அனைத்து பணியையும் சரிசெய்வான். மேலும் உமது அனைத்து நோக்கத்தையும் உமக்கு வழங்குவான். இறைவனின் படைகள் இதன் பக்கம் கவனம் செலுத்தும்.

இந்த அடையாளத்தின் வாதம் இதுவாகும். அதாவது, இறைவன் கூறுகின்றான்: திருக்குர்ஆன் இறைவனின் வேதமும் எனது கூற்றுகளும் ஆகும்.

எனது அடையாளங்களால் என்ன வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதை நன்றாக சிந்தித்து பாருங்கள். (இதனை அல்லாஹ் இல்ஹாமில் கூறுகின்றான்)

கூறுகின்றார்கள்: இதே நோக்கத்திற்காகவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றியிருந்தார்கள் என்பதை

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

*Weekly* **BADAR** *Qadian*

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 04 May 2023 Issue No. 18

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

நான் தற்போது எடுத்துரைத்திருந்தேன். பொய்ப்படுத்தப்பட்ட நிலையில் புதிய அடையாளங்களுடன் தவ்ராத்தை உண்மைப்படுத்த வேண்டும் என்பது அன்னாரின் வருகையின் நோக்கமாக இருந்தது.

புதிய விண்ணின் அடையாளங்களுடன் திருக்குர்ஆனின் உண்மையை கவனக்குறைவில் இருக்கும் மக்களிடத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்ற இந்த நோக்கத்திற்காகவே என்னை இறைவன் அனுப்பியுள்ளான்.

பாயே முஹம்மதியான் பர்மினார் புலந்த் முஹக்கம் இஃப்தாத் என்ற ஃபாரசீக இறை இல்ஹாமில் இதன் பக்கமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், இதே விஷயம்தான் பராஹீனே அஹ்மதிய்யாவில் இந்த ஏனைய இல்ஹாம்களில் உள்ளது.

اَلرَّحْمٰنُ عَلَّمَ الْقُرْاٰنَ۔ لِتُنْذِرَ قَوْمًا مَّآ اُنْذِرَ اٰبَآ ؤُ هُمْ۔
وَلِتَسْتَبِيْنَ سَبِيْلُ الْمُجْرِمِيْنَ۔ قُلْ اِنِّيْٓ اُمِرْتُ وَاَنَا اَوَّلُ الْمُؤْمِنِيْنَ

பொருள்: எவர்களின் மூதாதையர்கள் எச்சரிக்கப்படவில்லையோ அந்த மக்களை நீர் எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதற்காகவும், குற்றவாளிகளின் வழி திறக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் ரஹ்மானாகிய இறைவன் உமக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுத்துள்ளான்.

குற்றவாளிகளின் வழி திறக்கப்படும் என்பதன் பொருள் குற்றவாளிகள் மீது இறைவனின் சான்றுகள் முழுமை செய்யப்படும் என்பதாகும். கூறினார்கள்: நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்ட தூதர் ஆவேன். மேலும் நான் எல்லாரையும் விட முதலில் ஈமான் கொள்ளக்கூடியவன் ஆவேன்.

கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஈஸா (அலை) அல்லாஹ்வின் நபியாக தவ்ராத்தை உண்மைப்படுத்த வந்தார். அன்னாருடன் ஒப்பிடுகையில் உமது சாட்சியத்திற்கு என்ன மதிப்பு உள்ளது? அவரோ அல்லாஹ்வின் நபியாக இருந்தார். அல்லாஹ் அவரை நபியாக ஆக்கி அனுப்பினான். அன்னார் தவ்ராத்தை உண்மைப்படுத்துவதற்காக தோன்றியிருந்தார்கள். நீர் எப்படி, எந்த அந்தஸ்தில் திருக்குர்ஆனின் சாட்சியத்திற்காக வந்துள்ளீர் என்று ஒருவர் கேட்கலாம்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

சாட்சியம் எதனை எதிர்பார்க்கின்றது. இந்த இடத்திலும் புதிய உண்மைப்படுத்துதல் பணிக்காக ஒரு நபியே வந்திருக்க வேண்டும் என்று மக்கள் கூறுகின்றனர்.

எனவே இதற்கான பதில் என்னவென்றால், இஸ்லாத்தில் தனது நாணயத்தை அழகுறச் செய்கின்ற அந்த நபித்துவத்தின் வாசல் அடைக்கப்பட்டுள்ளது. அதாவது சுதந்திரமான மற்றும் ஷரீஅத்துடன் வரக்கூடிய நபித்துவம் (அதன் வாசல் அடைக்கப்பட்டுள்ளது).

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: وَلٰكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ النَّبِيّٖنَ என்று அல்லாஹ் கூறுகின்றான். لَا نَبِيَّ بَعْدِيْ என்று ஹதீஸில் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் மரணம் தெளிவான சான்றுகளால் நிரூபணம் ஆகிவிட்டது. எனவே உலகில் அன்னார் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையானது வீண் ஆசையாகும். திருக்குர்ஆனும் கூறுகின்றது. ஹதீஸும் கூறுகின்றது. மஸீஹ் மரணமடைந்துவிட்டார் என்பதும் நிரூபணம் ஆகிவிட்டது. எனவே அந்த மஸீஹே மீண்டும் வருவார் என்பது முற்றிலும் தவறான நம்பிக்கையாகும்.

கூறுகின்றார்கள்: வேறு ஒரு புதிய அல்லது பழைய நபி வந்தால் பின்னர் நமது நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு காத்தமுல் அன்பியா ஆவார்கள்? அதாவது அன்னாரின் கத்மே நுபுவ்வத்திற்கு வெளியிலிருந்து வந்தால்.

ஆயினும், வலாயத்தின் வஹீ மற்றும் இறை உரையாடல்களுக்கான வாசல் அடைக்கப்படவில்லை.

இந்த நிலையில் இதன் பொருள் இது மட்டுமே ஆகும். அதாவது, புதிய அடையாளங்களுடன் உண்மையான மார்க்கத்தை உண்மைப்படுத்த வேண்டும். மேலும், உண்மையான மார்க்கத்திற்கு சாட்சியம் அளிப்பது ஆகும். எனவே அல்லாஹ்வின் அடையாளமாக இருக்கின்ற அடையாளங்கள் அவை நபியின் மூலமாக வெளிப்பட்டாலும் வலியின் மூலமாக வெளிப்பட்டாலும் சரியே! அவை அனைத்தும் (ஒருவகையில்) ஒரே அந்தஸ்தை கொண்டவை ஆகும். ஏனெனில் அவற்றை அனுப்பக்கூடியவன் ஒருவனே ஆவான்.

இறைவன் நபியின் கரத்தின் மூலமாக மற்றும் நபியின் மூலமாக ஏதாவது விண்ணின் ஆதரவை வெளிப்படுத்தினால் அது வலிமை மற்றும் மகிமையில் உயர்ந்தது ஆகும்;ஆனால், அது வலியின் ஞானத்திற்கு ஆதரவாக இருந்தால் வலிமை மற்றும் மகிமையில் அது குறைவானது ஆகும் என்று கருதுவது முற்றிலும் அறிவீனமும், மடமையும் ஆகும். இன்னும் கூறப்போனால், சில அடையாளங்கள் இஸ்லாத்திற்கு ஆதரவாக எவ்வாறு வெளிப்படுகின்றன என்றால் அந்நேரத்தில் எந்த நபியும் இருப்பதில்லை. எந்த வலியும் இருப்பதில்லை. உதாரணமாக யானைப் படையினரை அழிப்பதற்காக வெளிப்பட்ட அடையாளம் ஆகும்.

கூறினார்கள்: ஆக, வலியின் அற்புதம் என்பது நபியைப் பின்பற்றுதலின் அற்புதம் ஆகும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம் ஆகும். அதாவது அவர் எந்த நபியை பின்பற்றுகின்றாரோ அவரின் அற்புதமே ஆகும். அடுத்து, கராமத் எனும் அற்புதமும் அற்புதமாகிவிட்டால் பின்னர் அற்புதங்களில் வேறுபடுத்துவது நம்பிக்கையாளரின் பணியல்ல. அதுமட்டுமின்றி, முஹத்திஸும் நபிமார்கள் மற்றும் தூதர்களைப் போன்று இறைவனால் அனுப்பப்பட்டவர்களைச் சார்ந்தவர் ஆவார் என்பது ஸஹீஹான ஹதீஸிலிருந்து நிரூபணம் ஆகியுள்ளது. புகாரியில்

وَمَا أَرْسَلْنَا مِنْ رَسُوْلٍ وَلَا نَبِيٍّ وَلَا مُحَدَّثٍ

என்ற கிராஅத்தை கவனமாக படியுங்கள். மேலும் மற்றோர் அறிவிப்பில் عُلَمَاءُ أُمَّتِيْ كَأَنْبِيَاءِ بَنِيْ إِسْرَائِيْلَ என்று வந்துள்ளது.

கூறுகின்றார்கள்: சூஃபிமார்கள் தமது ஆன்மிகக் காட்சிகளாலும் இந்த ஹதீஸை இறைத் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து உண்மைப்படுத்தியுள்ளார்கள். அதாவது, அன்னாரிடமிருந்து அந்த ஹதீஸை அவர்கள் உண்மைப்படுத்தியுள்ளார்கள். முஸ்லிம் ஹதீஸில் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு ஆதரவாக நபி என்ற சொல்லும் வந்துள்ளது. அவர் நபியாக இருக்கமாட்டார் என்று கூறுகின்ற நீங்கள் இதனையும் நினைவிற் கொள்ளுங்கள். ஒன்று வலிக்கான சான்று வழங்கியுள்ளார்கள். இரண்டாவதாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு ஆதராவாக நபி என்ற சொல் ஹதீஸில் வந்துள்ளது. அதாவது உவமையாகவும், ஒப்புமையாகவும் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பாராஹீனே அஹ்மதிய்யாவிலும் இதேபோன்ற சொற்கள் இறைவன் புறமிருந்து எனக்கு ஆதரவாகவும் உள்ளன.

இதன் தொடர்ச்சி : அடுத்த இதழில்...

தமிழாக்கம் : A. மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press, Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad